மலர்-2 இதழ்-48 ஆகஸ்ட் 16-31 2018 இலவச புத்தகம் www.aanmeegamalar.com

e- magazine

ஆன்மிகமலர் டிரஸ்ட் வெளியீடு

# ஆன்மிகமலர்

ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!!

மெயில் புக்

மாதமிருமுறை

**உலக வரலாற்றில் முதன்முறையாக இ-மெயிலில் வெளியிடப்படும் இதழ்**




## புரோமோஷன் தரும்

# விநாயகர்

## சிவாலய பிரதட்சிண பலன்கள்

- ❖ நந்தியையும் பலிபீடத்தையும் சேர்த்தே பிரதட்சிணம் செய்ய வேண்டும். அதனால் கிடைக்கும் பலன்கள் வருமாறு:
- ❖ 3 முறை செய்தால் நினைத்தது நடக்கும்.
- ❖ 5 முறை செய்தால் வெற்றி உண்டாகும்.
- ❖ 7 முறை செய்தால் நல்ல குணம் ஏற்படும்.
- ❖ 9 முறை செய்தால் குழந்தை பாக்கியம் கிடைக்கும்.
- ❖ 11 முறை செய்தால் நீண்ட ஆயுள் கிடைக்கும்.
- ❖ 13 முறை செய்தால் வேண்டுதல் நிறைவேறும்.
- ❖ 15 முறை செய்தால் செல்வம் கிடைக்கும்.
- ❖ 17 முறை செய்தால் செல்வம் பெருகும்.
- ❖ 108 முறை செய்தால் அஸ்வமேத யாகப் பலன்.
- ❖ 1008 முறை செய்தால் ஒருவருட தீட்சை யாகப் பலன்

## ஊமத்தம் பூ பூஜை

ஊமத்தம் பூவை அநேகமாக எல்லோராலும் ஏற்கப்படாத ஒரு பூவாக கருதப்படுகிறது. ஆனால் ஊமத்தம் பூவை தனது பூஜைக்கு உகந்ததாகக் கொள்ளும் கருணைக்கடல் சிவபெருமான் ஆவார். அதிலும் குறிப்பாக ஸ்ரீ அக்னீஸ்வரரை ஊமத்தம் பூ கொண்டு வழிபடுகிறவர்களுக்கு மனக்கவலைகள் தீரும். பில்லி, சூனியங்கள் அகலும். சித்தம் தெளியும்.



## சிவபெருமான் ஆடிய 7 வகை தாண்டவங்களும் ஆடப்பட்ட இடங்களும்

1. படைத்தல் செயலாகிய காளிகா தாண்டவம் (திருவாலங்காடு)
2. காத்தலுக்குரிய கவுரி தாண்டவம் (திருப்பத்தூர்)
3. காத்தல் செயலுக்கு சந்தியா தாண்டவம் (மதுரை)
4. அழித்தலுக்குரிய சங்கார தாண்டவம் (ஆதாரமில்லை)
5. மறைத்தலுக்கு திரிபுர தாண்டவம் (குற்றாலம்)
6. அருளலுக்கு ஊர்த்தவ தாண்டவம் (திருநெல்வேலி)
7. ஐந்தொழிலுக்கு ஆனந்த தாண்டவம் (சிதம்பரம)





## சிவபெருமான் லிங்கமாக காட்சி தருவதன் தத்துவம்

சிவலிங்கத்தின் அடிப்பாகம் பிரம்ம பாகமாகும். இது, மனிதனின் உயிர் மூச்சுக்குரியது. நடுப்பாகம் மனிதனின் தசை, ரத்தம் ஆகியவற்றிற்கு பாதுகாப்பானது. மேல்பாகம் மனிதனின் எலும்பு, நரம்பு ஆகியவற்றை குறிக்கிறது.இப்படிப்பட்ட சிவலிங்கத்தை பூஜை செய்தால் மும்மூர்த்திகளை பூஜை செய்த பலனை பெறலாம்.

## சிவலிங்க பூஜையால் அற்புத நன்மை அடைந்தவர்கள்:

1. வெள்ளை யானை, சிலந்தி, பாம்பு, முக்தி நிலை பெற்றன ஸ்ரீகாளஹஸ்தி இராகு, கேது கிரகங்கள்.
2. கண்ணப்பர் முக்தி அடைந்தார்ஸ்ரீ காளஹஸ்தி.
3. மார்க்கண்டேயர் நீண்ட ஆயுளைப் பெற்றார்திருக்கடையூர்.
4. அம்பிகை வழிபட்ட தலம் காஞ்சிபுரம்.
5. விநாயகர் வழிபட்ட தலம் திருச்செங்கோடு.
6. முருகன் வழிபட்ட தலம் திருமுருகன் பூண்டி.
7. திருமால் வழிபட்ட தலம் திருவீழிமிழலை.
8. பிரம்மன் வழிபட்ட தலம் சீர்காழி.9. இந்திரன் வழிபட்ட தலம் மதுரை.
10. யானை வழிபட்ட தலம் திருவானைக்காவல்.
11. எறும்பு வழிபட்ட தலம் திருவெறும்பூர்.
12. பார்வதிதேவி மயிலாக வழிபட்ட தலம் மயிலாப்பூர்.

## சிவன் கோவில் திசைகளின் பலன்கள்:

- ❖ வடகிழக்கு பார்வை வாதநோய் தீரும்
- ❖ தெற்கு பார்வை அகால மரணம் நீங்கும்.
- ❖ மேற்கு பார்வை திருமண தடை நீங்கும், பிரிந்த தம்பதிகள் சேரும்.வடமேற்கு பொன்னும்,பொருளும் சேரும்
- ❖ தென்மேற்கு தெய்வீக அருள் உண்டாகும்
- ❖ வடக்கு வேலை வெற்றியடையும்.

## பஞ்சபூத தலங்கள்

1. காஞ்சீபுரம் ........................................பிருத்வி (நிலம்) ....................மூலாதாரம்
2. திருவானைக்காவல் ............................அப்பு (நீர்) ...........................சுவாதிஷ்டானம்
3. திருவண்ணாமலை ..............................தேயு (தீ) ..............................மணிபூராகம்
4. காளஹஸ்தி .........................................வாயு (காற்று) ......................அனாகதம்
5. சிதம்பரம் ..............................................ஆகாயம் (வான்) ..................விசுத்தி



ஆன்மிகமலர் மெயில் புக்



www.aanmeegamalar.com





# இடுப்பு வலியை போக்கும்

# இடுக்கு பிள்ளையார்

பிள்ளையார் தொந்தியுடன் இருப்பது இயல்பு. ஆனால் இங்கு நந்தியுடன் இருப்பது வித்தியாசம். ஆனால், விசேஷம் என்ன தெரியுமா... இங்கு மூலவர், பிள்ளையார் இல்லை; மூன்று வாசல் கொண்ட சிறிய குகை!

ஆம்... இடுக்குப் பிள்ளையார் ஒரு 'இன்ஸ்டன்ட் நிவாரணர்'!

தொடர்ந்து இருமுறை மாடிப்படி ஏறி இறங்கினாலே அப்பாடா... என ஆகிவிடுகிறது. ஒரே நேரத்தில் 14 கிலோ மீட்டர் கிரிவலப்பாதையை கடந்தால் என்னாவது...? ஒன்றும் ஆகாது. அதற்குத் தான் இருக்கவே இருக்கிறார் இடுக்கு பிள்ளையார்.

கிரிவலப்பாதையில் ஏராளமான கோயில்கள் இருக்கின்றன. இதில் இடுக்கு பிள்ளையார் மட்டும் ரொம்ப ஸ்பெஷல்! அஷ்ட லிங்கங்களில் ஒன்றான குபேர லிங்கத்திற்கு அருகில் உள்ளது கோயில்.

அளவில் மிகச் சிறியது; அறிவில் மிகப் பெரியது. எப்படிப்பா இப்படியெல்லாம் யோசிக்க முடியுது... என வாய்பிளந்து நிற்கும் அளவிற்கானது கோயிலின் அமைப்பும், அதில் பொதிந்திருக்கும் அர்த்தமும்.

சிறிய குகை போன்ற அமைப்புடன் 3 வாசல் கொண்டது கோயில். அதன் முன்னால் நந்தி, பின்னால் பிள்ளையார் உள்ளனர். கோயிலில் பின் வாசல் வழியாக ஒருக்களித்துப் படுத்தவாறு உள்ளே நுழைய வேண்டும். மெதுவாக கையை ஊன்றி நகர்ந்து நகர்ந்து முன்வாசல் வழியாக வெளிவர வேண்டும். முழுதாக வெளியே வரும் போது நந்தி சிலை முட்டுவது போல் இருக்கும். ஆனால் முட்ட மாட்டோம். வெளியே வந்து நந்தியை தொட்டு வணங்கி விட்டு எழுந்து நின்று பார்த்தால், இதற்குள்ளா நாம் வந்தோம் என தோன்றும். முதலில் 'சிறுபிள்ளைத்தனமாக அல்லவா இருக்கிறது' என்று நினைப்போம். ஆனால் அதை அனுபவித்த பிறகே தெரியும் எவ்வளவு உத்தமமான சிந்தனை என்று. குண்டானவர்களும் இதன் வழியாக எளிதாக வரலாம் என்பது கூடுதல் சிறப்பு.

கிரிவலம் முடித்ததும், இங்கு வழிபட்டால் இடுப்பு, தலை, கை, கால் வலி தீரும். குழந்தை இல்லாதவர்கள் வீட்டில் மழலைக்குரல் கேட்கும். இங்கு வருபவர்கள் 'இடுக்கு பிள்ளையார் இருக்க இடுப்பு வலி எதற்கு...?' என சொல்வது உறுதி.

– ராமஜயம்





www.aanmeegamalar.com







# தோப்புக்கரணத்திற்கான காரணமும் பலன்களும்...

"பிள்ளையாரப்பா.... ஏனப்பா இந்த மாதிரி சோதனை பண்றே" – என்று உரிமையுடன் அனைவரும் ஒருமையில் பேசுமளவு அன்பையும் கருணையையும் பொழிபவரே விநாயக மூர்த்தி ஆவார். ஸ்ரீவிநாயகரின் தோற்றத்தைப் பற்றிப் பல புராண வைபவங்கள் உண்டு. அனைத்தும் உண்மையே! காரணம், ஹேரம்ப கணபதி, லக்ஷ்மி கணபதி எனப் பல்வேறு கணபதி அவதாரங்களின் மஹிமைகளைப் பறை சாற்றுபவையே அவை! அரசமரத்தடி, குளக்கரையென எங்கும் நிறைந்து அனைத்து ஜீவன்களுக்கும் அருளைப் பொழியும் கண்கண்ட மூர்த்தியே பிள்ளையாரப்பன்! ஆதிசங்கரர் "ஷண்மதம்" என ஆறுவிதமான தெய்வ மூர்த்திகளின் வழிபாடுகளை நிர்ணயித்து விநாயக வழிபாட்டைக் "காணாபத்யம்" எனும் தலைப்பில் தந்துள்ளார். "தேகப் பயிற்சி செய்ய இடமில்லையே, குழந்தைகள் மெலிந்திருக்கின்றனவே" என்று ஏங்கும் Flat வாசிகளான நகரத்து மக்கள், தினந்தோறும் குழந்தைகளோடு இல்லத்தில் "தோப்புக் கரணம்" இட்டுவர வாழ்க்கைக்குரிய பலன்களாக, உடல் வலுவும், மனதிடமும், நல்ல இரத்த ஓட்டமும் ஏற்படுவதோடு, Arthritis போன்ற மூட்டு, தசை நோய்கள் வாழ்நாளில் ஒருகாலத்திலும் அண்டாது, இளவயதிலேயே பயின்று வந்திடில்!

– மு.கிருஷ்ண மோகன்
போன்: 08526223399



# படிப்பில் ஆர்வம் வரவழைக்கும் பிள்ளையார்

தற்போதைய கல்வி முறையில் பல்வேறு கடினங்கள் நிறைந்து விட்டதால் பிள்ளைகள் அவற்றை ஏற்கவும், சாதிக்கவும் முடியாமல் போகிறது, இது போன்ற வேதனையை பெரும்பாலும் மந்த புத்தி என்ற சோம்பலால்தான் விளைகின்றன. இந்த மந்த புத்தி மாறி கல்வியில் சிறக்க இந்த எளிய பரிகாரம் பலன் தரும்.

சுக்லபட்ச (வளர்பிறை) சதுர்த்தி நாளில் அருகிலுள்ள விநாயகர் கோவிலில் குழந்தை பெயரில் அர்ச்சனை செய்து 11 குழந்தைகளுக்கு பென்சில், நோட்டுக்களை இனிப்புடன் சேர்த்து தானம் செய்யவும். கல்வி மேம்படும்.

மேலும் சங்கட ஹர சதுர்த்தியன்று மந்த புத்தி குழந்தைகளை விநாயகர் வழிபாட்டில் ஈடுபடுத்தினாலும், மந்த புத்தி அகலும், சந்திரனின் பாவத்தை போக்கும் விநாயகர், குழந்தைகளின் மந்த புத்தியையும் எளிதாக தீர்த்துவைப்பார்.





www.aanmeegamalar.com

# ‘புரமோஷன் விநாயகர்’

## காக்கும் கணபதியின் பரிகார தலங்கள்?



❖ மதுரை மீனாட்சி அம்மன் கோயில் சுவாமி சந்நதி செல்லும் வழியில் ஒரு தூணியில் ‘விநாயக தாரணி’ எனப்படும் பெண்வடிவ விநாயகியை பார்க்கலாம். இவருக்கு ‘சந்தனக்காப்பு’ அலங்காரம் செய்து வணங்கினால் பெண்களுக்கு திருமண தோஷம் விலகும்.

❖ சென்னை சவுகார்பேட்டையிலுள்ள ஏகாம்பரேஸ்வரர் கோயிலில் உள்ள ‘சகோதர விநாயகரை’ வணங்கினால் பிரிந்திருக்கும் சகோதரர்கள் ஒன்று கூடுவார்கள்.

❖ மதுரை மீனாட்சி அம்மன் கோயில் அருகே உள்ள கீழ ஆவணிமூல வீதி பைரவர் கோயிலுள்ள ‘சோம சூரிய கணபதி’யை அமாவாசை நாளில் வேண்டிக்கொள்ள கிரக, நாக தோஷம் விலகும்.

❖ திருவலஞ்சுழி வெள்ளை விநாயகர் போல திருத்துறைப்பூண்டி அருகில் இடும்பாவனம் சற்குணநாதர் கோயிலிலும் கடற்நுறையாலான வெள்ளை விநாயகர் அருள்கிறார். இவருக்கு பால், பன்னீர் அபிஷேகங்கள் செய்து வேண்டிக்கொள்ள குடும்பத்தில் ஐஸ்வர்யம் நிலைக்கும்.

❖ கும்பகோணம் அருகிலுள்ள கொட்டையூர் கோடி விநாயகரை வழிபட்டு பின் மற்ற தெய்வங்களை வழிபட்டால் கோடி செல்வங்கள் பெறலாம் என்பது ஐதீகம்.

❖ ஆறுபடை வீடுகளில் ஒன்றான சுவாமிமலை கோயிலின் கொடிமரம் அருகே தெற்கு நோக்கி அமைந்துள்ள ‘கண் கொடுத்த விநாயகரை’ அங்குள்ள புஷ்கரணியில் 48 நாட்கள் நீராடி வணங்கிவர கண்பார்வை கோளாறு குணமாகுமாம்.

❖ காரைக்குடி அருகே உள்ள மாத்தூரிலும், சிவகங்கை மாவட்டம் பி.அழகாபுரியிலும் ‘கலங்காத கண்ட விநாயகர்’ கோயில்கள் உள்ளது. கடன் பிரச்னையால் வாடுபவர்கள் இவர்களிடம் முறையிட கடன் பிரச்னை தீரும்.

❖ திண்டுக்கல் மாவட்டம் நிலக்கோட் டை அணைப்பட்டி வீர ஆஞ்சநேயர் கோயிலுள்ள விநாயகரை ‘புரமோஷன் விநாயகர்’ என்கிறார்கள். இவருக்கு அறுகம்புல் மாலை சாத்தி வேண்டினால் பணி உயர்வு கிடைக்குமாம்.

❖ கோவை மாவட்டம் நெகமம் அருகிலுள்ள தேவனாம்பாளையத்தில் உள்ள அமணீஸ்வரர் கோயிலுள்ள அம்பாள் பாதத்தின் கீழ் உள்ள சதுர் விநாயகர்களை வணங்கினால் தாய், பிள்ளைகளுக்கு இடையேயான மனக்கசப்பு தீரும்.

❖ தேனி மாவட்டம் கம்பம் அருகிலுள்ள சுருளி மலை அருவியின் அடிவாரத்திலுள்ள பூத நாராயண பெருமாள் கோயிலில் தனிச்சந்நதியில் ‘கால் நடைகளைக் காக்கும் கணபதி’ உள்ளார். பால் சுரப்பதில் குறைபாடு இருந்தாலோ இவரை வேண்டிக்கொள்ள குணமாகும்.

❖ சென்னை திருவான்மியூர் மருந்தீஸ்வரர் கோயிலுள்ள ‘மும்முடி விநாயகரை’ வேண்டிக்கொள்ள முன்னோர்கள் ஆத்ம சாந்தி அடையும். நினைத்த பேறுகளையும் அடையலாம்.

❖ உடுமலைப்பேட்டையிலுள்ள பிரசன்ன விநாயகர் கோயிலில் உள்ள மேற்கூரையில் 12 ராசிகளைக் குறிக்கும் சிற்பம் பொறிக்கப்பட்டுள்ளது. இதன்கீழ் நின்று விநாயகரை வணங்கினால் அவரவர் ராசியில் ஏற்படும் தோஷங்கள் நீங்கும்.

❖ வேலூர் சேண்பாக்கம் செல்வ விநாயகர் கோயிலில் மூலஸ்தானத்தில் சுயம்பு மூர்த்தியாக 11 விநாயகர்கள் தன் அருகிலேயே கொடிமரமும் கொண்டு அருள்பாலிக்கிறார்கள். திருமணத்தடை மற்றும் குழந்தைப்பேறு இல்லாதவர்கள் இங்கு சங்கடஹர சதுர்த்தி நாளில் விரதமிருந்து தீபம் ஏற்றி வழிபட நல்ல பலன் கிடைக்கும்.

❖ பொள்ளாச்சி அருகிலுள்ள குமாரலிங்கம் தத்தாத்ரேயர் சுவாமி மற்றும் திருவள்ளூர் மாவட்டம் திருமழிசை ஜெகந்நாதப் பெருமாள் கோயில்களில் விநாயகர் வயிற்றில் ராகு, கேது எனும் பாம்புகள் பின்னியுள்ள நிலையில் இருப்பார்கள். இவர்களை வணங்கினால் நாக தோஷத்தால் பாதிக்கப்பட்டவர்களின் இன்னல்கள் தீரும் என்பது ஐதீகம்.

❖ விநாயகரின் நர்த்தனக் கோலம் மிகவும் அபூர்வமான ஒன்று. இப்படிப்பட்ட கோலத்தை திருப்பூர் அருகிலுள்ள ஊத்துக்குளி பெரியநாயகி உடனமர் கைலாசநாதர் கோயிலில் காணலாம். இவரை வழிபட்டு இனிப்பு நைவேத்யம் படைத்தால் இழந்த பதவிகளை

# விநாயகர், துர்க்கை விசர்ஜனம் செய்வதன் கருத்து

விநாயகர், துர்க்கை போன்ற கடவுள்களை வணங்கிய பின் ஒரு குறிப்பிட்ட நாளில் அந்த விக்ரகங்களை விசர்ஜனம் (கடலில் அல்லது நீர்நிலைகளில்) செய்வது பற்றி நிவேதிதை அவர்கள் கூறியதிலிருந்து தொகுக்கப்பட்டது.


நிவேதிதை

மேற்கத்தியர்களால் சரியாகப் புரிந்து கொள்ள முடியாத ஹிந்துப் பழக்க வழக்கங்களுள் விக்கிரக வழிபாடு முக்கியமானதொன்று. இதைக் காரணம் காட்டி ஹிந்துக்களை மதமாற்றம் செய்வது தற்போதும் தொடர்கிறது. “வங்காளத்தில் துர்கா பூஜையின் போது நாள் முழுவதும் உண்ணாவிரதம் அனுஷ்டித்த பூஜாரி துர்கையின் களிமண் உருவத்தின் முன் அமர்ந்து தியானத்தில் ஈடுபடுகிறார்.

இந்த தியானத்தின் மூலம் உருவத்திற்கு அருட்சக்தி ஏற்றுகிறார். இவ்வாறு புனிதப்படுத்தப் பட்டவுடன் அந்தக் களிமண் உருவம், இறைவனை பக்தியோடு எண்ணவும் உணரவும் உதவும் பவித்திரமான சாதனம் ஆகிவிடுகிறது. அதன்முன் ஒரு பித்தளைக் குடத்தில் நீர் நிரப்பி வைக்கப்பட்டிருக்கிறது. இந்தப் பூரண கும்பத்தை நோக்கித் தன் மனோமுயற்சியைத் திருப்புகிறார் பக்தர். ஏன் என்று கேட்டால், குடத்தை நீர் நிரப்பியிருப்பதுபோல இப் பிரபஞ்சம் முழுவதையும் வியாபித்திருக்கிறது உருவமற்ற பரம்பொருள் என்று அவர் பதிலளிக்கிறார்.

இதுவரை சகோதரி அளிக்கும் விளக்கத்தை யார் வேண்டுமானாலும் புத்தகத்தைப் படித்து விட்டுக்கூட அளிக்கலாம். இதனையடுத்து சகோதரி கூறுவதுதான் அவருடைய மேதாசக்தியை வெளிப்படுத்துகிறது. “பிரதிமையாகிய இந்த உருவம் (Image) எதற்காகப் பயன்படுத்தப்பட்டதோ அந்த நோக்கத்தையே சிதைத்துவிடலாம். உருவமில்லாப் பரம்பொருளைக் குறிக்கவந்த சின்னம்தான் இது என்பதை மறந்து இதையே தெய்வம் என்று மக்கள் நினைத்துவிடலாம். இந்த ஆபத்தை உணர்ந்த பாரதத்தின் முன்னோர்கள் அதைத் தவிர்ப்பதற்கும் ஒரு ஏற்பாடு செய்திருக்கிறார்கள். எனவேதான் பூரண கும்பத்தையும் வழிபடுகிறார்கள். அதுமட்டுமல்ல, வழிபாட்டின் முடிவில் இந்தச் சிலையை அப்படியே தூக்கி ஆற்றில் விடுகிறார்கள்.” விஸர்ஜனம் என்னும் சடங்கின் தத்துவத்தை இவ்வாறு அழகாக விளக்குகிறார் சகோதரி நிவேதிதை.

## 51 விநாயகர் வழிவங்களும் பலன்களும்!

1. ஏகாக்ஷர கணபதி: பரிபூரண சித்தி.
2. மகா.கணபதி: கணபதி அருள் கிடைக்கும்
3. த்ரைலோக்ய. மோஹன கணபதி: ஸர்வ ரக்ஷாப்ரதம்.
4. லக்ஷ்மி கணபதி: தன அபிவிருத்தி
5. ருணஹர கணபதி: கடன் நிவர்த்தி.
6. மகா வித்யா கணபதி: தேவ அனுக்ரகம்.
7. ஹரித்ரா கணபதி: உலக வசியம்.
8. வக்ரதுண்ட கணபதி: அதிர்ஷ்ட லாபம்.
9. நிதி கணபதி: நிதி ப்ராப்தி.
10. புஷ்ப கணபதி: தானிய விருத்தி.
11. பால கணபதி: மகிழ்ச்சி, மன நிறைவு.
12. சக்தி கணபதி: சர்வ காரியசித்தி.
13. சர்வ சக்தி கணபதி: சர்வ ரக்ஷாப்ரதம்.
14. க்ஷிப்ர ப்ரஸாத கணபதி: துரித பலன்.
15. குக்ஷி கணபதி: ரோக நிவர்த்தி.
16. ஸ்ரீ சந்தான லட்சுமி கணபதி: மக்கட்செல்வம்.
17. ஸ்ரீ ஸ்வர்ண கணபதி: ஸ்வர்ண பிராப்தி.
18. ஹேரம்ப கணபதி: மனச்சாந்தி.
19. விஜய கணபதி: வெற்றி.
20. அர்க கணபதி: தோஷ நிவர்த்தி.
21. ச்வேதார்க்க கணபதி: மாலா மந்திரம்.
22. உச்சிஷ்ட கணபதி: திரிகால தரிசனம்.
23. போக கணபதி: சகலலோக ப்ராப்தி.
24. விரிவிரி கணபதி: விசால புத்தி.
25. வீரகணபதி தைரியம்.
26. சங்கடஹர கணபதி: சங்கட நிவர்த்தி.
27. கணேசாங்க நிவாரணி: லட்சுமி மந்திர சித்தி.
28. விக்னராஜ கணபதி: ராஜயோகம்.
29. குமார கணபதி: மாலா மந்திரம்.
30. ராஜ கணபதி: மாலா மந்திரம்.
31. ப்ரயோக கணபதி: மாலா மந்திரம்.
32. தருண கணபதி: தியானயோக ப்ராப்தி.
33. துர்கா கணபதி: துக்க நிவாரணம்.
34. யோக கணபதி: தியானம்.
35. நிருத்த கணபதி: கலா பிவிருத்தி.
36. ஆபத்சகாய கணபதி: ஆபத்துகள் நீங்குதல்.
37. புத்தி கணபதி: வித்யா ப்ராப்தி.
38. நவநீத கணபதி: மனோவசியம்.
39. மோதக கணபதி: சம்பூர்ண பலன்.
40. மேதா கணபதி: மேதா பிவிருத்தி.
41. மோஹன கணபதி: ரக்ஷாப்ரதம்.
42. குரு கணபதி: குருவருள்.
43. வாமன கணபதி: விஷ்ணு பக்தி.
44. சிவாவதார கணபதி: சிவபக்தி.
45. துர்வாக கணபதி: தாப நிவர்த்தி.
46. ரக்த கணபதி: வசிய விருத்தி.
47. அபிஷ்டவரத கணபதி: நினைத்ததை அடைதல்.
48. ப்ரம்மண கணபதி: ப்ரம்ம ஞானம்.
50. மகா கணபதி: ப்ரணவமூலம்.
51. வித்யா கணபதி: ஸ்ரீ வித்தை






# கலியை அழிக்க அவதரித்த அய்யா வைகுண்டர்

அய்யா வைகுண்டர், இறைவன் கலியுகத்தை அழித்து தர்ம யுகத்தை மலரச்செய்ய எடுத்த மனு அவதாரம் என அய்யாவழி புராண வரலாறு கூறுகிறது. அய்யாவழி புராணத்தின் மூலமாக அகிலத்திரட்டு அம்மானை விளங்குகிறது. அகிலம் கூறும் ஒருமைக் கோட்பாட்டின் அடிப்படையாக விளங்கும் ஏகம், வைகுண்டராக அவதரிப்பதால் அவரை மையமாகக் கொண்ட ஒரிறைக் கோட்பாட்டை அய்யாவழி வலியுறுத்துகிறது.

அய்யாவழி புராண வரலாற்றின்படி அய்யா வைகுண்டரின் தூல உடலையும், சூட்சும உடலையும் தாங்கி சம்பூரணத்தேவன் என்னும் தெய்வ லோகவாசி தாமரைகுளம் என்னும் ஊரில் பிறக்கிறார். வைகுண்ட அவதாரம் வரை அவதாரச் சடலத்தை சுமக்கும் பொறுப்பு சம்பூரணதேவனுக்கு கொடுக்கப்படுகிறது. இவர் ‘முடிசூடும் பெருமாள்’ என்று வரலாற்றில் அறியப்படுகிறார்.

### தூல மற்றும் சூட்சும உடல்களின் பிறப்பு

கி.பி.1809-ஆம் ஆண்டு இந்தியாவின் தென் கோடியான குமரி மாவட்டத்திலே தாமரைகுளம் என்னும் சிற்றூரில், பொன்னு, வெயிலாள் தம்பதியருக்கு மகனாக ஒரு குழந்தை பிறக்கிறது. சாணார் இனத்திலே, ஏழை குடும்பத்தில் பிறந்த அக்குழந்தைக்கு ‘முடிசூடும் பெருமாள்’ என்று பெயர் சூட்டுகிறார்கள். ஒருசிலரின் தூண்டுதலால் அப்பகுதியை ஆண்டு வந்த திருவிதாங்கூர் மன்னன் இப்பெயரை சூட்டியதை எதிர்த்ததால் குழந்தையின் பெயர் ‘முத்துக்குட்டி’ என்று மாற்றப்பட்டது.

அகிலம் இதைப்பற்றி கூறும் பொது அக்குழந்தை இறந்து பிறந்ததாகவும், சடம் பிறந்த உடன் சம்பூரணதேவனின் ஆன்மா அவ்வுடலில் செலுத்தப்படுவதாக கூறுகிறது. ஆனால் அங்கு நடந்த எதையும் குழந்தையின் பெற்றோரோ, குடும்பத்தாரோ அறியவில்லை. பிறந்து சில நொடிகள் குழந்தை சலனமற்று இருந்ததை மட்டும் அவர்கள் அறிகிறார்கள். இச்செயல் குறோணியை அழிக்க இறைவன் எடுக்க இருக்கும் வைகுண்ட அவதாரத்துக்காக போடப்பட்ட திட்டத்தின் முதல் பகுதியாகும்.



ஆக சம்பூரணதேவனாகிய இக்குழந்தை இதுமுதல் முத்துக்குட்டி என்ற பெயரைத் தாங்கி வளர்ந்து வருகிறது.

முத்துக்குட்டி தெய்வீகத்தில் ஆர்வம் உடைய சிறுவனாக வளர்ந்து வருகிறான். அவன் சிறந்த விஷ்ணு பக்தனாவன். அவன் தனது வீட்டில் அவருக்கென்று ஒரு பீடம் அமைத்து வழிபட்டதாக அகிலம் கூறுகிறது. அவனுக்கு பதினேழு வயதில் திருமணம் நடக்கிறது. பக்கத்து ஊரான புவியூரைச் சார்ந்த திருமாலம்மாள் என்னும் மங்கையை மணக்கிறார். முத்துக்குட்டி என்னும் இச் சம்பூரணத்தேவன் பனைத் தொழிலும், விவசாயமும் செய்து வாழ்ந்து வருகிறார்.

இவ்வாறு வாழ்ந்து வரும் அவர் தனது இருபத்து இரண்டாவது வயதில் நோய்வாய்ப்பட்டு இரு வருட காலமாக அவதியுற்று வருகிறார். ஒரு நாள் முத்துக்குட்டியின் தாயாரான வெயிலாள் ஒரு கனவு காண்கிறாள். அக்கனவில் நாராயணர் தோன்றி அவளது மகனை மாசி மாதம் திருச்செந்தூர் முருகன் கோவிலில் நடைபெறும் விழாவுக்கு கொண்டு வந்தால் மிகுந்த பேறு கொடுப்பதாகக் கூறுகிறார். அதனால் வெயிலாள் சுற்றத்தார் சூழ முத்துக்குட்டியை ஒரு தொட்டிலில் வைத்து சுமந்து செல்கிறார்கள். அங்கே கடலருகே சென்றதும் அவர் எழுந்து வேகமாக நடந்து கடலுக்குள் சென்றது போல் அனைவருக்கும் தெரிகிறது. ஒரு நாள் காத்திருந்த பிறகு அனைவரும், போனவர் வரமாட்டார்; அவர் இறந்து விட்டார் என்று ஊர் திரும்பினார்கள். ஆனால் தாய் வெயிலாள் மட்டும் அழுதழுது கடற்கரையில் அமர்ந்திருந்தாள்.

மூன்றாம் நாள் கொல்லம் ஆண்டு 1008 மாசி 20ல், வைகுண்டர் கடலிலிருந்து வெளிப்படுகிறார். அவர் கொண்டுள்ள சொரூபம் (உடல்) காரணமாக முத்துக்குட்டி கடலிலிருந்து வருவதாக வெயிலாளுக்குத் தெரிகிறது. அவள் ஓடிச்சென்று தனது மகனை கட்டி அணைக்கச் செல்கிறாள். ஆனால் அவர் அவளை தடுக்கிறார். மேலும்



தாம் அவளது மகன் இல்லை என்றும் கலியை அழிக்க நாராயணரே வைகுண்டராக உலகில் அவதரித்திருப்பதாகவும் கூறுகிறார். ஆனால் தாய்ப் பாசம் காரணமாக அவரை வெயிலாள் தனது மகன் முத்துகுட்டி என்றே பார்க்கிறாள். அவளுக்கு தனது நிலையை வைகுண்டர் கீழ்க் கண்டவாறு கூறுகிறார்,

“ஆண்டாயிரத்து எட்டு முன்னே அன்னை எனவே நீயிருந்தாய் கூண்டாம் எட்டம் மாசியிலே குணமாய் நாராயணர் மகவாய் சான்றோர் கதிகள் பெற்றிடவே தர்மகுண்டம் பிறந்து வொரு குன்றாக் குடைக்குள் அரசாளக் கொண்டே போறேன் கண்டிரு நீ”

ஆனால் அதை ஏற்றுக் கொள்ளும் நிலையில் வெயிலாள் இல்லை. அதனால் தான் பிறந்த கடற்பதியின் மண்டபங்களையும் அதன் மெடைகளையும் அவரின் பிறப்பு மற்றும் வருகைக்கு சான்றாகக் கட்டுகிறார். ஆனால் தாய்ப் பாசம் தடுக்க, அவளால் வைகுண்டரின் நிலையை அறிந்து கொள்ள முடியவில்லை. மேலும் வைகுண்டர், தான் காட்டிய பதிச் சிறப்பை யாருக்கும் கூறக்கூடாது என்று கூறுகிறார்.

இவ்வாறு கூறிய வைகுண்டர், தான் பெற்ற


ஆன்மிகமலர் மெயில் புக்

www.aanmeegamalar.com

விஞ்சையை செயல்படுத்தும் பொருட்டு தெட்சணம் நோக்கி நடந்தார். வைகுண்டர் கடலிலிருந்து அவதரித்த இடம் அய்யாவழி சமயத்தின் புனிதத் தலங்களுள் ஒன்றாகும். அவதாரப் பதி என்று அழைக்கப்படும் இது, செந்தூர்பதி என அகிலத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## வைகுண்ட அவதாரம்

முதலாவதாக கலி யுகத்துக்கு முந்திய ஐந்து யுகங்களிலும் குறோணியின் ஒவ்வொரு துண்டுகளும் ஒவ்வொரு உருவம் தாங்கி உலகுக்கு வருகிறது. அவற்றை அழிக்கும் பொருட்டு நாராயண மூர்த்தி உலகில் பிறந்து அவனை அழித்தார். ஆனால் தற்போதைய கலி யுகத்தில் குறோணியின் ஆறாவது துண்டான கலி, மாயையாக உலகிற்கு வந்து மக்களின் மனதில் குடிகொண்டுள்ளதால் அவனை முன்பு போல் அழிப்பது இயலாததாகும். மேலும் கலியன் கேட்ட கொடிய வரங்களில் அவன் மும்மூர்த்திகளின் வடிவத்தையும் வரமாகப் பெற்ற காரணத்தினால், நாராயணர் நேரடியாக உலகில் அவதரித்து அவனை அழிக்க முடியாது. இதனை அகிலம், 'முன்னின்று கொல்ல மூவராலும் அரிது' என்கிறது. ஆனால் முதலில் குறோணியை கொல்லத் தவம் இருக்கும் போது திருமால் சிவனிடம் கொடுத்த வாக்கு பிரகாரம் நாராயணர் தான் கலியனை அழிக்க கடமைபட்டிருக்கிறார்.

மேலும் கலியன் வரம் வாங்கி வரும் போது நாராயணருக்கு செய்து கொடுத்த சத்தியத்தின் காரணமாக, ஒரு பண்டாரத்தை கலியனை வைத்து அட்டி செய்ய வைப்பதன் மூலம், அவனை அழிக்க முடியும். இவ்வனைத்து நிலைகளையும் சரி செய்யும் வண்ணம் முதன் முதலாக, நிர்குணனாகிய, ஏகப்பரம்பொருளான இறைவன் நாராயணரை சூட்சுமமகக்கொண்டு மனித உடலிலே மூன்றின் தொகுதியாக, பண்டார வடிவத்தில் அவதரிக்கிறார்.

இறைவன் நேரடியாக பிறக்க முடியாத காரனத்தினால் அவதாரம் மூன்று நிலையில் நடக்கிறது.

❖ அவதாரத்தின் முதல் நிலை, இறந்து பிறக்கும் குழந்தை (தூல உடலின் பிறப்பு).

❖ இரண்டாம் நிலை, தூல உடலில் செலுத்தப்படும் சம்போரணாதேவன், சுமக்கும் நாராயணரின் சூட்சும உடல்.

❖ அவதாரத்தின் மூன்றாம் நிலை, 24 வருடங்களிக்கு அப்பால்சம்போரணதேவனுக்கு முக்தி அளிக்கப்பட்டு, அவ்வுடலில் ஏகம் உலகில் அவதரித்து வருவது.

இது முதல் சான்றோர் வழியில் வந்த மனித உடல், நாராயணரின் சூட்சும உடல், ஏகம் என்னும் காரண உடல், இவை மூன்றின் தொகுதி வைகுண்டர் என பிறக்கிறார். எனவே புதிதாக பிறந்த வைகுண்டக் குழந்தைக்கு விஞ்சை என்னும் உபதேசம் நாராயணரால் கொடுக்கப்படுகிறது.

பின்னர் முருகனுக்கு சட்டம் வைத்த பின்னர் ஏகப்பரம்பொருள், நாராயணரை உட்படுத்தி, வைகுண்ட அவதாரம் கொண்டு கடலின் மேல் வந்து தருவையூர் என்னும் இடத்தில் மனித உடல் (பொன்னு, வெயிலாள் தம்பதியின் மகன்னான முத்துக்குட்டியின் உடல்) எடுத்து பண்டார உருவாக தெட்சணம் நோக்கி நடந்தார்.



ஆக வைகுண்டர் என்பவர் சாதாரண மனிதர் மட்டும் அல்ல, நாராயணர் மட்டும் அல்ல, ஏகப்பரம்பொருள் மட்டும் அல்ல, ஆனால் மற்றொரு புறம், மனிதரும் தான், நாராயணரும் தான், ஏகப்பரம்பொருளும் தான். சரியாகச்சொன்னால் அவர் இம்மூன்றின் தொகுதியாவார். சிவபெருமானுடன் ஏற்கனவே செய்து கொண்ட ஒப்பந்தப் பிரகாரம் கலியை அழிக்கும் கடமை உடையவர் இவரே. வைகுண்ட அவதாரத்தில் இவ்வளவு சூட்சுமங்கள் மேற்கொண்டதற்கு காரணம், கலியன் வாங்கிய வரங்களை முறியடிப்பதற்காகவே.

## தவம்

தெட்சணம் எனப்படும் பூவண்டன் தொப்பை (தற்போதய சுவாமி தோப்பு) அடைந்த வைகுண்டர் ஆறு ஆண்டுகள் கடுந்தவம் புரிந்தார். அவர் மூன்று நிலையில் தவம் மேற்கொண்டதாக அகிலம் கூறுகிறது. மூன்று நிலைகளும் மூன்று நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டது. இந்த நோக்கங்களை கூறும் போது அகிலம்,

"முதற்றான் தவசு யுகத்தவசு என்மகனே
தத்தமுள்ள இரண்டாம் தவசு சாதிக்காமே
மூன்றாம் தவசு முன்னுரைத்த பெண்ணாட்கும்
நன்றான முற்பிதிரு நல்ல வழிகளுக்கும்"

மேலும் தவத்தின் இருப்பு முறையும் நிலைக்கு நிலை மாறுபட்டதாக கூறப்படுகிறது. முதல் இரண்டு வருடங்களும் அவர் ஆறு அடி குழியிலும், அடுத்த இரண்டாண்டுகள் தரையிலும், கடைசி இரண்டு ஆண்டுகள் உயர்ந்த பேடமிட்டு தவம் இருந்ததாகவும் கூறப்படுகிறது. மேலும் அவர் தவம் புரிந்த கால கட்டத்தில் பச்சரிசிப் பால் அல்லாது வேறெந்த உணவு உட்கொள்ளவில்லை; குறைவாகப் பேசினார்.

## தீய சக்திகளை ஒடுக்குதல்

அய்யா வைகுண்டரின் அவதார இகனைகளில் முக்கியமானதாக பேய்கள் எரிப்பை அகிலத்திரட்டு அம்மானை கூறுகிறது. இவை அய்யா தவம் இருந்த காலகட்டத்தில் நடந்தவைகளாகும். வைகுண்ட அவதாரத்தின் மூலம் அனைத்து பேய்களும் எரிக்கப்படுகின்றன.

"உகசிவ வானோர் எல்லோரும் போகரிது
வகையுடன் நாந்தான் செய்யும் வழிதனை
பார்த்துக்கொள்ளும்
இகபரன் முதலாய் இங்கே இரும் எனச்
சொல்லிவைத்துப்
பகைசெய்த கழிவை எல்லாம் எரிக்கவே
பரனங்குற்றார்"

அய்யா தவம் இருந்த வடக்கு வாசலில் இச்சம்பவம் நடைபெறுகிறது. அய்யாவை தரிசிக்க வந்திருந்த மக்களிலே சிலரின் உடம்புகளில் பேய்களை ஆட வைக்கிறார் அய்யா. பின்னர் அவர்களின் சக்திகளை ஒப்படைத்து தீயிலே தங்களை மாய்த்துக்கொள்வதாக சத்தியம் செய்யவைக்கிறார். இவ்வாறெள அய்யாவின் கட்டளைகளுக்கிணங்கி அவை சத்தியம் செய்ததும் பேயால் ஆட்கொள்எப்பட்டவர்கள் தரையில் விழுகின்றனர். இவ் வாறு பேய்கள் எரிக்கப்படுகின்றன. அகிலம் இந்நிகழ்ச்சியை சிறப்பாக விவரிக்கிறது.

## மந்திர தந்திர முறைகளை திரும்பப்பெறுதல்

பேய்களை எரித்தது போன்று மேலும் பல அவதார இகனைகளை வைகுண்டர் நடத்தியுள்ளார். இதைப்பற்றி கூறும்போது அகிலம், வைகுண்டர் மலையரசர்கள் எனப்படும் காணிக்காரர்களின் மந்திர தந்திர வாகட முறைகளை திரும்பப்பெற்று விட்டதாக கூறுகிறது.

மலைகளில் வாழும் காணிக்காரர்கள் மிகுந்த மந்திர சக்தியுடையவர்களாகவும் குறி சொல்லும் திறமை படைத்தவர்களாகவும், பேய் ஓட்டும் சக்தி படைத்தவர்களாகவும் கருதப்படுகிறார்கள். வைகுண்டர் அவர்களை தெச்சணம் எனப்படும் அய்யா தவம் இருந்த சுவாமிதோப்பிலே மக்கள் முன்னிலையில் தங்கள் சக்தியனைத்தையும் வைகுண்டரிடம் ஒப்படைத்து உறுதிமொழி அளிக்க செய்தாக ஆகிலம் கூறுகிறது. அய்யாவின் இச்செயலை மக்கள் மிகுந்த ஆச்சிரியத்துடன் கண்டுகளித்தனர். இச்செயல் அவர்கள் மனதில் வைகுண்டர் மீது மிகுந்த பக்தியை உருவாக்கியது. அவர்கள் அய்யாவை வைகுண்ட சுவாமி என அழைக்கலாயினர். பேயை எரித்த வைகுண்டர் சுற்றி இருந்த மக்களை பார்த்து கீழ்க்கண்டவாறு கூறினார்,

"பொய்யில்லை பசாசில்லை பில்லியின்
வினைகளில்லை
நொய்யில்லை நோவுமில்லை நொன்பலத்
துன்பமில்லை
தொய்வில்லை இறைகளில்லை சுருட்டும்
மாஞாலமில்லை
மையில்லை உலகத்தோரே வாழும் ஒரு
நினைவாலென்றார்"

## பண்டாரமாக வைகுண்டர்

வைகுண்டரின் புகழ் தென் திருவிதாங்கூர் மற்றும் திருநெல்வேலி ஆகிய பகுதிகளில் மிகவேக மாகப் பரவியது. அவர் சமுதாயப் பார்வையில் ஒரு அற்புத சக்தி படைத்த மனிதராக அறியப்பட்டார். மறுபுறம் சமய நம்பிக்கையின் அடித்தளத்தில் பண்டாரமாக அறிவிக்கப்பட்டார். அகிலத்திரட்டு அம்மானை அவரை நாராயண பண்டாரம் என விளம்புகிறது.

நாட்டுமக்கள் இவரது போதனைகளை கவனிக்க இவர் முன்னிலையில் கூடினார்கள். மேலும் அவர் அவர்களது நோய்களைத் தீர்த்ததாகவும் அகிலம் கூறுகிறது. அவரை மக்கள் வழிபடத்தொடங்கினர். வைகுண்டர் அவர்களை சாதி வேறுபாடின்றி ஒரே கிணற்றில் குளிக்க போதித்தார். மேலும் அவர்களை அனைத்து பேதங்களையும் கடந்து சமபந்தி உண்ணவும் போதித்தார். இந்தியாவின் முதல் சமபந்தி அய்யாவழி சமயக் கூடல்களில் தான் அமைக்கப்பட்டதாக கருதப்படுகிறது.

அய்யா மக்களுக்கு பல போதனைகளை வழங்கினார். அவற்றில் முக்கியமானதாக, அவர் நடக்கும் கலியுகத்தை அழித்து பேரின்ப நிலையான தர்மயுகத்தை மலரச்செய்து சான்றோருக்கு நித்திய வாழ்வை அளிக்கப் போவதாக கூறினார்.

மறுமை தர்மமான அந்நிலையை அடைய "தாழக் கிடப்பாரை தற்காப்பதே தர்மம்" என்னும் கோட் பாட்டை ஆதாரமாக வைத்துச் செயல்பட மக்கள் அவரால் அறிவுறுத்தப்பட்டனர். மேலும் அவரின் அவதார செயல்பாடுகள், சமுதாயப் பார்வையில் இக்கோட்பாட்டையே மையமாக வைத்தே சுழல் வதைப் பார்க்க முடிகிறது.

சான்றோராகிய மக்கள் தர்மயுக வெளிப்படலுக்கு முக்கிய பங்கு ஆற்ற வேண்டியவர்களாக அறிவுறுத்தப்பட்டனர். அவர்கள் தங்களை தர்மயுக மக்களாக மாற்ற சில முறைகளை கடைபிடிக்க அய்யா வளியுறுத்தினார். இவ்வாய்மொழிகளில், மக்கள் தங்களை சுய மரியாதை



உடையவர்களாக, மானமுடையவர்களாக, அச்சமற்றவர்களாக, வடிவப்படுத்துமளவு கலி தன்னால் அழிந்துகொண்டே வரும் என்பது முதன்மைபெற்றது. இங்குள்ளவை அனைத்தும் ஒன்றாதலால் எதற்கும் அச்சமில்லை என்னும் அத்துவித கோட்பாடடை ஒத்திருந்தது இது. மக்கள் கலியாகிய மாயை விட்டகலுமளவு வைகுண்டர் தர்ம ராஜாவாக இருந்து அவர்களை ஆளும் இத்தர்ம யுகத்தை உணரமுடியும் என்னும் அகிலக் கோட்பாடு இதை உறுதி செய்கிறது.

### குற்றப்பத்திரிகை

அய்யாவின் புகழையும் அவரைச்சுற்றி திரளும் ஆயிரக்கணக்கான மக்களையும் கண்டு பொறையுற்ற சில மேட்டுகுடியினர் அப்பகுதியை ஆண்டு வந்த திருவிதாங்கூர் மன்னன் சுவாதி திருநாளிடம் புகார் செய்ததாக தெரிகிறது. இதை அகிலமும் குறிப்பிடுகிறது. இதன் பெயரில் மன்னன் வைகுண்டரை கைது செய்து துன்பப்படுத்தினான். அங்கு அவர் பல அற்புதங்களை செய்ததாக அகிலம் குறிப்பிடுகிறது.

### சிறை வாசத்துக்குப் பின்பு

சிறையிலிருந்து விடுவிக்கப்பட்ட வைகுண்டர் சான்றோர் மக்களால் வாகனம் மூலம் தெச்சணம் கொண்டுவரப்பட்டார். பின்னார் சான்றோர் மக்களை பக்குவப்படுத்த புற மற்றும் அகத்தூய்மையை அளிக்கும் துவையல் தவசு எனப்படும் தவமுறையை செயல்படுத்த 700 குடும்ப மக்களை வாகைப்பதிக்கு அனுப்பிவைத்தார். மேலும் பல அவதார இகனைகளை நிறைவேற்றினார்.

### வைகுண்டம் போதல்

வைகுண்டர் ஐவரை சீடர்களாக தேர்ந்தெடுத்தார். அவர்களுள் ஒருவரான அரி கோபாலன் சீடர் மூலமாகவே அய்யாவழியின் முதன்மைப் போதனை நூலாகிய அகிலத்திரட்டு அம்மானை வெளிப்படுத்தப்படுகிறது.

வைகுண்டர் 1851 ஆம் ஆண்டு ஜூன் மாதம், திங்கட்கிழமையில் வைகுண்டம் சென்றார். அவர் எடுத்த அவதார உடல் தற்போது சுவாமிதோப்பு பதியில் பள்ளியறையாக இருக்கும் இடத்தில் மண்ணறையில் வைக்கப்படுகிறது. இப்பார்வை அகிலத்தின் அடிகளை ஆதாரமாகக் கொண்டு கருதப்படுபவை. ஆனால் இதே வரிகளை ஆதாரமாகக் கொண்டு அவர் மனித உரு எடுக்கவில்லை என்றும், இறைவனை ஜோதி ரூபமாக பள்ளியறையில் பாவித்து சான்றோர் திருநாள் நடத்தினார்கள் என்பது சில தத்துவ முதன்மை வாதிகளின் கருத்து. மேலும் சில வரிகளின் ஆதாரத்துடன், வைகுண்டர் மனித உரு எடுத்தார் எனவும், ஆனால் அவர் உடலோடு வைகுண் டம் சென்றுவிட்டதால் சுவாமி தோப்பு பள்ளியறையில் மேற்குறிப்பிட்ட மண்ணறை முறை ஏற்றுக்கொள்ளத் தக்கதல்ல என்பது வேறு சிலரின் வாதம்.

### சீடர்கள்

அய்யா வைகுண்டருக்கு ஐந்து சீடர்கள் உண்டு. முந்தின யுகத்தில் பாண்டவர்களாக இருந்த ஐந்து பேரையும் இக்கலி யுகத்தில் ஐந்து சீடர்களாக பிறவி செய்யப்பட்டதாக அகிலம் கூறுகிறது. அவர்கள்,

தர்ம சீடர்
வீமன் சீடர்
அர்ச்சுணன் சீடர்
சகாதேவன் சீடர்
நகுலன் சீடர்

– தொகுப்பு: நாகராஜன், போன்: 8825844033





# கோவில் மணியின் அற்புத பலன்கள்

கோவிலுக்குள் செல்லும்போது மணி அடித்துவிட்டு வணங்குவது ஏன் தெரியுமா? கோவிலில் அடிக்கும் மணி ஓசைக்கும், மனிதர்களின் மூளைக்கும் இடையே தொடர்பு உள்ளது என சாஸ்திரத்தில் நமது முன்னோர்கள் கூறியிருக்கின்றனர்.

பூஜை செய்யும் போது பயன்படுத்தப்படும் ஒருபொருளாக உள்ள மணிஓசையின் பின் ஒரு அறிவியல் நுண்ணறிவும் இருக்கிறது. கோவில் மணி அடித்துவிட்டு வணங்கினால், தங்களின் வேண்டுதலை கடவுள் காதுகொடுத்து கேட்பார் என்று சிலர் நினைப்பார்கள். ஆனால் அது உண்மை அல்ல.

ஆகம சாஸ்திரங்களின் படி, கோவில் மணியில் இருந்து வெளிப்படும் ஓசை எதிர்மறை சக்திகளை விரட்டி, மனதிற்கும், உடலுக்கும் நேர்மறை சக்தியை அதிகரிக்க செய்து, நல்ல ஆற்றலை அதிகரிக்கச் செய்கிறது.

கோவில் மணியின் ஓசை மனிதனின் மூளை செயற்திறனை மேலோங்க செய்கிறது என்று அறிவியலில் ஒரு பின்னணி இருக்கிறது.

கோவில் மணியில் இருந்து வெளிவரும் ஒலியில் ஒரு தனித்துவமாக இருக்கும் அதற்கு கோவில் மணிகளில் உள்ள கேட்மியம், துத்தநாகம், நிக்கல், குரோமியம் மற்றும் மாங்கனீசு போன்ற உலோகங்கள்தான் காரணமாகும்.

கோவில் மணியில் இருந்து வெளிவரும் ஒலியானது, மூளையின் வலது மற்றும் இடது பக்கங்களை ஒரு சமநிலைக்கு கொண்டு வர உதவுகின்றது.

கோவில் மணியில் இருந்து வெளிப்படும் சத்தம் உடலில் நேர்மறை ஆற்றல் மற்றும் மூளையில் செயற்திறனை அதிகரிக்கச் செய்து, விழிப்புணர்வை மேம்படுத்தி, மனதிற்கு நிறைவான அமைதி மற்றும் நிம்மதியை அளிக்கிறது.

# ஏன், இறந்த பின்னர், சாதாரண மனிதன் தனது முற்பிறவியை மறக்கிறான்?

"இயற்கைக்கு மாறான மரணம் மற்றும் உடல் பற்றுள்ள நிலையில் நிகழும் மரணம் வலிமிகுந்தவை மட்டுமின்றி, அவை நினைவுத்திறனையும் தெளிவற்றதாக்குகின்றன. உண்மையில் ஒருவர் ஆன்மீகத்தில் மேம்பட்டிருந்தால் ஒழிய, முந்தைய வாழ்வை நினைவு கொள்வது எப்பொழுதும் விரும்பத்தக்கதல்ல. இறந்த பின்னர் ஒருவரது முந்தைய அடையாளத்தின் மறதி, அவரது கடந்தகால தோல்விகள், துயரங்கள், பற்றுதல்கள் ஆகியவற்றின் உணர்வு நிலையை மறந்து புதிய வாழ்வைத் துவங்குவதற்கு இடமளிக்கிறது. இதிலுள்ள ஒரே பாதகம், அவரது முந்தைய தவறான செயல்களிலிருந்து கற்றுக்கொள்ளவில்லையெனில் அவற்றின் விளைவுகள் பற்றிய எச்சரிக்கையை பொருட்படுத்தாதுநாட்பட்ட மது பழக்கமுள்ளவர், ஈரல் பாதிப்பினால் நிகழக் கூடிய இறப்பைப்பற்றி உணர்வுபூர்வமாக அறிந்திருந்தால்கூட தொடர்ந்து அந்த மோசமான திரவத்தைப் பருகுவதைப்போன்றுஅவர் அந்த அனுபவங்களை திரும்ப நிகழ்த்தக்கூடும்.

ஆன்மாவின் தூய உணர்வு நிலையானது ஒரு பிறவியிலிருந்து மற்றொரு பிறவிக்கு நினைவாற்றலின் தொடர்ச்சியை அழியாமல் காத்துவந்த போதிலும் உடல் அடையாள உணர்வு நிலை அவ்வாறில்லை. உண்மை என்னவெனில் இறப்பிற்குப் பின்னர் கீழ்கண்ட நிலைமைகளில் நினைவாற்றல் உயிர்வாழ இயலாது.

1. உடல்மீது பற்று இருந்தால்
2. கடந்த கால உடைமைகள், குடும்பம், அல்லது நண்பர்கள் மீது பற்றுதல் இருந்தால்
3. தீய கர்மவினையின் வலிமையான சிக்கல் இருக்கிறது என்றால் நல்ல மற்றும் கெட்ட செயல்களின் விளைவுகளிலிருந்து ஒருவர் மேலெழவில்லையென்றால்.



புதிதாகப்பிறந்த ஓர் ஆத்மா (எ) மற்றும் (பி) யில் இருப்பதைப்போன்று நினைவில் வைத்துக்கொண்டு அதன் முந்தைய உடல், உடைமைகள் குடும்பம் அல்லது நண்பர்கள் இவற்றுடன் பற்றுவைத்திருக்குமானால் அந்த ஆன்மா உணரும் மனவேதனையையும் ஏமாற்றத்தையும் கற்பனை செய்து பாருங்கள்! அது ஒரு புதிய சூழ்நிலை, புதிய குடும்பம், புதிய நண்பர்கள் மத்தியில் வேறு வாழ்வைத் தொடர விரும்பாது. ஆன்மா அனைவருக்கும் அனைத்து மனித இனத்திற்கும் ஒரு சகோதரன். ஒரே ஒரு சின்ன வட்டத்திலுள்ள மனிதர்களை மட்டும் அது நேசித்தால் அது எவ்வளவு குறுகியதாகிவிடும் என்பதை கற்பனை செய்து பாருங்கள். அது இறுதி இலக்கான ஐக்கியத்தை அடைவதற்காக தானும் விரிவடையாது; மற்ற ஆன்மாக்களையும் விரிவடைய விடாது. மற்ற ஆன்மாக்களுடனான நம் ஆன்மாவின் இந்த ஒன்றிய தன்மையை ஒரே பரமாத்மாவுடனான ஐக்கியத்தில் நாம் உணரவேண்டும் மற்றும் எல்லோரையும் உள்ளடக்குவதற்காக ஆன்மா தன் குடும்பம் மற்றும் நண்பர்களின் வட்டத்தை விரிவுபடுத்தாவிடின் அவ்வாறு செய்வது சாத்தியமல்ல.

மேற்கண்டவற்றில் (சி) யின் விஷயத்தில் ஆன்மா அதன் முந்தைய தீயகர்மவினை, போராட்டங்கள், துயரங்கள் நினைவில் கொண்டு தீவிரமாகவே ஊக்கமிழந்துவிடும் அளவு மனந்தளர்வுற்று, முன்னேறுவதற்கான புதிய முயற்சிகளை மேற்கொள்வதற்கு விருப்பம் இல்லாமிலிருக்கும். அது தனது இருமை கடந்த இயல்பை மறந்துவிடும். ஒவ்வொரு வாழ்விலும் மரணம் ஒரு இருண்ட உணர்வுப்பதிவுகள் தோல்விகள் மற்றும் பாவங்களின் நினைவுகள் மற்றும் பாரபட்சமான கருத்துகள் ஆகியவற்றைக் கழுவி அகற்றிவிடுகிறது. அதனால் ஆன்மா உலகத்திலிருந்து மேலெழுந்து தன்னை விடுவித்துக் கொள்ளும்பொருட்டு புதுவழிகளில் தன்னை வெளிப்படுத்துவதற்கும் இன்னும் புதிய முயற்சிகளை மேற்கொள்வதற்கும் ஒரு புதிய வாழ்வைத்துவங்க இயலும்".

குருதேவரின் மேலே கூறியுள்ள போதனைகளை சற்று சிந்தித்துப் பார்த்தோமேயானால், அவற்றில் எவ்வளவோ மேன்மையானதும் மனிதனுக்கு மிகவும் தேவையானதுமான விஷயங்கள் அடங்கியுள்ளது தெரியவருகிறது. சம்சார வாசனையினால் பிறப்பெடுத்து பூமிக்கு வந்துள்ள ஓர் ஆத்மா இறைவனை அடைவதற்கு எத்தனை பிறவிகள் எடுக்க வேண்டி யுள்ளது அல்லது அதற்கு எத்தனை காலம் தேவைப்படும் என்பதும் அதற்கு என்னென்ன செய்ய வேண்டும் என்பதும் ஒரு மனிதனுக்கு தெரியாது. மனிதன் பிறக்கிறான்; உலகத்தின் போக்கிற்கு ஏற்றவாறு வாழுகிறான்; பின்னர் மடிகிறான். இவ்வாறாகத்தான் காலம் காலமாக, யுகம் யுகமாக நடந்து கொண்டிருக்கின்றன.

அவன் கண்டதெல்லாம், வாழ்வதற்கான பணம் தேடிப்பெறுவதுபணத்தை எப்படி வேண்டுமானாலும் எந்த வழிமூலமாக இருந்தாலும் சரி உணவு உண்பது, குடும்பம் நடத்துவது தூங்குவது போன்றவற்றைத்தான் ஒரு மனிதன் செய்யக்கூடிய கடமை என்றெண்ணுகின்றான். பணம் தேடிப்பெறுவது நல்ல வழி மூலமாகவா அல்லது தீய வழிமூலமாகவா என்பதை ஆராய்வதில்லை. மனம் போன போக்கிலே சென்று இறுதியில் மரணம் என்னும் படுகுழியில் விழுந்து எடுத்த பிறவியை முடிக்க வேண்டியது. 'இறைவன்' என்ற நமது பாதுகாப்பாளர் அனைத்திற்கும் மேலே, நமக்குள்ளே நம்மை அரவணைத்துக் கொண்டிருக்கிறான் என்பதை யாரும் ஆழ்ந்து சிந்திப்பதில்லை. "நாங்கள் வாழ்ந்துகொண்டிருக்கிறோம்; இன்றவன் நம்மை பாதுகாத்துக்கொள்வார்" என்று வாயால் பேசி அவர் செய்யும் செயல்களுக்கெல்லாம் ஒரு முடிவான வார்த்தையையும் சொல்லிக்கொள்வர்.

இவ்வாறிருக்கின்ற உலகத்தில் எத்தனை பேர் இறைவனைத்தேடுவர்; எத்தனை பேர் இறைவனை அடைவர்? "ஆயிரம் பேர் என்னைத் தேடுவார்கள்; ஆனால் என்னை அடைவது ஒருவர் மட்டும்தான்" என்று பகவான் கிருஷ்ணன் பகவத் கீதையில் அருளியுள்ளார்.

ஓர் ஆத்மா ஆன்மீகத்தில் முன்னேற்றமடைவதற்கும் ஆத்ம ஞானம் பெற்று இறைவனுடன் இணைவதற்கும் எவ்வளவு முயற்சித்

39
பாகம்
பரமஹம்ஸ யோகானந்தர் அருளிய வழிமுறைகள்
மனித வாழ்வு மேம்படுவதற்காக

மாதம் இரண்டு முறை
இலவசமாக வெளிவரும்
“ஆன்மிகமலர் மெயில் புத்தகம்”
aanmeegamalar.com
இணையதளத்தில்
இலவசமாக டவுன்லோடு
செய்தும் படிக்கலாம்

தால் அது சாத்தியமாகும் என்பதை மனிதனாகப் பிறந்தவர்கள் சிந்தித்துப்பார்ப்பது மிகவும் அவசியம். ஒவ்வொரு பிறவியிலும் அவரவர்கள் செய்துள்ள பாவங்களினால் இறைவனை உணர முடியாமலும் அறிய முடியாமலும் இருக்கின்றனர். வாழ்வில் நிகழும் தீமைகள் அனைத்திற்கும் அனைத்து துன்பங்களுக்கும் முக்கிய காரணம் அஞ்ஞானமேயாகும். (இறைவனை அறியாமலி ருப்பது). பாவங்கள் முழுவதும் தீர்ந்தால் மட்டுமே ஒழிய இறைஞானம் கிடைப்பதற்கான வழியைக் கண்டுபிடிக்க முடியாது. அந்த வழியை கண்டுபிடிக்க மனிதனால் முடியாது. வழியும் திறக்காது. அது தானாகவே இறைவனின் அருளால் மட்டும்தான் திறக்க நேரும். அதற்கு நமக்கு இறைவன் அருளிய விவேகத்தைப் பயன்படுத்தி மனம், வாக்கு, செயல் இவற்றால் அன்றாட வாழ்க் கையில் தீமை செய்யாமலிருப்பது மிகவும் அவசியம்.

அவ்வாறு செய்வதற்கு முயற்சிக்கலாம். அவ்வாறு தொடர்ந்து அன்றாட வாழ்க்கையில் பாவங்களைச் செய்வதை குறைத்தோமானால் இறைவனின் அருளால் குரு வருவார். நாம் புதிய பாவங்களை இறை வனின் அருளால் செய்யாமலிருக்கலாம். ஆனால் பழைய பாவங்களை (முற்பிறவிகளில் உள்ளவை) நம் மால் தீர்க்க முடியாது. அதற்கு குருவும் குரு அருளும் தேவை. ஒரு மனிதனின் பாவங்களை துடைப்பதற்கு தகுதியான குரு தேவை. தகுதியான குரு என்றால் இறைவனுடன் இணைந்தவர் எனப்பொருள். குருவை நாம் தேடத்தேவையில்லை. மனிதன் தன் அன்றாட வாழ்க்கையை எவ்வாறு நடத்துகிறான் என்பதை இறைவன் நமக்குள்ளேயிருந்து பார்த்துக்கொண் டிருக்கிறான். இறைவனுடன் இணைவதற்கான தகுதி ஒரு மனிதனுக்கு ஏற்பட்டால் (உடல், மனம் மற்றும் ஆத்மா தூய்மை அடைந்து, இறை வன் மட்டும்தான் மேலான பொருள் என்றும் மற்றவை அனைத்தும் தூசிக்குச் சமம் அல்லது குப்பைக்குச் சமம் என்றும் நினைத்து வாழும் ஒரு மனிதன்தான் தூய்மையானவன்; அவனுடைய மனதில் எப்பொழுதும் இறைவன் மட்டும் நிறைந்திருப்பான்; அவன் உண்மையானவன்) தானாகவே இறைவனாகின்ற குரு வருவார். குரு வந்தபின்னர் அந்த மனிதன் எதற்கும் பயப்படத் தேவையில்லை. தற்போது, இங்கே, இவ்வுலகிற்கு இறைவனாகின்ற குரு யார் என்றால் அவர் ஸ்ரீ ஸ்ரீ பரமஹம்ஸ யோகானந்தரே ஆவார். அவர், மீதமுள்ள நம் அனைத்து பாவங்களையும் துடைத்துவிடுவார்.

பகவத் கீதையில் பகவான் கிருஷ்ணன் கீழ்க்கண்டவாறு அருளுகிறார்;

பஹூனாம் ஜன்மநாமந்தே ஜ்ஞானவான் மாம் ப்ரபத்யதே வாஸுதேவ: ஸவமிதி ஸ மஹாத்மா ஸுதுர்லலப:

“இறைவனை அறியாமலிருப்பதுதான் சம்சார பந்தத்திற்கும் அதனால் ஏற்படும் துன்பங்களுக்கும் ஒரே காரணம். ஞானத்தால் இறைவனை அறிந்தால்மட்டும்தான் துன்பங்கள் விலகும். ஒவ்வொருவரும் ஞானம் பெற வேண்டும். உண்மையான ஆத்மஞானத்தால் மட்டுமே ஜீவனுக்கு வரப்பெற்றுள்ள அஞ்ஞான பந்தத்திலிருந்து தன்னை காப்பாற்றிக்கொள்ள முடியும். ஆனால் ஞானம் என்பது அவ்வளவு எளிதில் கிடைப்பதன்று. ஸம்சார வாசனைகள் ஞானத்திற்கு முக்கிய தடையாக உள்ளன. ஒவ்வொரு மனிதனும் மிகுந்த ஸம்சார வாசனையுடன்தான் பூமிக்கு பிறப்பெடுத்து வருகின்றான். அந்த வாச னையை பூமிக்கு வந்தபின்னர் அதிகரிப்பதே தவிர குறைப்பதற்கு யாரும் முயற்சிப்பதில்லை. அதனால் ஒவ்வொரு ஜீவாத்மாவும் ஞானம் பெற முடியாத நிலையிலுள்ளது. அந்த நிலையை மாற்ற வேண்டுமானால், சத்சங்கத்தைக் கேட்பதாலும் சாஸ்திரங்கள் படிப்பதாலும், நல்ல கர்மங்கள் செய்வதாலும் அந்த வாசனைகள் குறைந்து, மனம் தூய்மையடையும்பொழுதுதான் இறைவன்மேல் பக்தியும் அவனை அடையவேண்டுமென்ற தீவிர வைராக்கியமும் ஏற்படும். அது வளர்ந்து சம்சார வாழ்க்கை வாழ்ந்து கொண்டிருந்தாலும் மானசீகமான விடுதலை கிடைக்கும் பொழுது மட்டும்தான் ஞானம் பெறத்தகுதி ஒருவனுக்கு கிடைக்கப்பெறுகிறது. அப்படிப்பட்ட நிலை ஒருவனுக்கு ஒரு பிறவியில் கைவரப்பெறுவது என்பது மிகவும் கடினமாகும். எனவே அநேக பிறவிகளின் முடிவில் தேவையான பக்குவம் வரும்பொழுது ஒருவனுக்கு ஆத்மஞானம் கைவரப்பெறும்.

அந்த நிலை எவ்வாறெனில், அனைத்தும் இறைவனே என்பதை அறிந்து, இறைவனில் மூழ்கி வாழ்ந்து கொண்டிருக்கும் மகாத்மாவான ஞானியின் பதவி எவ்வளவோ அரிதாகும், விலை மதிக்க முடியாததும், எங்கேயும் கிடைக்காததும் அனைவராலும் ஆராதிக்கக்கூடியதுமாகின்றது இந்தப்பதவி. அப்படிப்பட்ட திவ்யமானஇறை வனின் சாம்ராஜியத்தில், இறைவனுடன் வாழும்பதவி கிடைக்க பல பிறவிகளாகும் என்றாலும் அதில் நஷ்டமேதுமில்லை. பல பிறவிகளுக்குப் பின்னர் ஓர் ஆத்மாவுக்கு ஞானம் கிடைத்துவிட்டால் அவர் தன்னியனாகி விடுகிறார். எப்படியானாலும் இறைவனை அடைவதற்கு ஆத்ம ஞானம் கிடைக்கத்தான் வேண்டும்.” (பகவத் கீதா அத்7 ஸ்லோகம் 19)

மற்றொரு விஷயம் என்னவென்றால், ஒரு மனிதன் இறைவனுடன் இறைவனின் சாம்ராஜியத்தில் வாழ்ந்து வரும்பொழுது துர் பாக்கியவசத்தால் ஸம்சார வாழ்வின் மேல் ஆசை வந்து பிறவியெடுத்து பூமிக்கு வந்தான் என்றால் அவன் அறிவு வந்த நாளிலிருந்து உலகத்தில் என்னென்ன துன்பங்கள் இருக்கின்றதோ அவை அனைத்தையும் அனுபவிக்க வேண்டியது தான். ஆனால் அப்பொழுதெல்லாம் அவன் இறை ஞாபகத்தில்தான் வாழுவான். அது அவனுக்கு பழைய நினைவு. அவ்வாறு ஒருவன் இறைவனை கைவிட்டு வந்தாலும் இறைவனின் அருட்கரம் அவனை அரவணைத்துக்கொண்டேயிருக்கும்; ஒரு நல்ல காலைபொழுதில் இறைவன் அவனுக்கு தன்னை வெளிப்படுத்தி அவனைத்தன்னுடன் சேர்த்துக்கொள்வான். அதுவரையிலும் அவனுக்கு இறைசோதனைகள் நிமித்தம் எண்ணற்ற துன்பங்கள் நேர்ந்துகொண்டிருக்கும். ஆனால் அவை தன் அன்புகுழந்தையின் மேல் படாமல் பனிபோன்று கரையச்செய்வான் அன்பு இறைவன்.

மீண்டும் மலரும்...

குருப்ரியா Cell No.9894595909

மஹாகும்பாபிஷே அழைப்பிதழ்
“அருள்மிகு ஸ்ரீ பசுபதீஸ்வரர்”, “அருள்மிகு ஸ்ரீ சுந்தர வரதராஜ பெருமாள்”
“ஜீர்ணோத்தாரண அஷ்டபந்தன மஹாகும்பாபிஷேகப் பத்திரிக்கை”
திருவெளிச்சை, கேளம்பாக்கம், சென்னை–603 103.
நாள்: 30–08–2018

நிர்வாக தொடர்புக்கு: 98410 28028

# சத்குரு அஞ்சலி காட்கில் சாதனை சம்பந்தமாக கூறிய அற்புத வழிகாட்டுதல் !

1. மற்றவர் கூற்றுப்படி நடப்பதால் உண்டாகும் பயன் மற்றவர் கூற்றுப்படி நடந்தால் மனதின் தியாகம் நடக்கிறது.

2. எப்பொழுதும் மற்றவருக்கு ஆனந்தத்தைத் தர முயற்சி செய்யுங்கள்!

நம்மால் மற்றவரின் மனம் எந்த விதத்திலும் துக்கப்படக் கூடாது. அதனால் பாவம் ஏற்படுகிறது மற்றும் நம் சாதனை பாதிக்கப்படுகிறது. நீங்கள் எப்பொழுதும் மற்றவருக்கு ஆனந்தத்தைத் தர முயற்சி செய்யுங்கள். எதிரிலுள்ளவருக்கு ஆனந்தத்தை வழங்கினால் அவரின் ஆத்ம ஸ்வரூபமாக விளங்கும் ஈச்வரன் நமக்கு ஆசீர்வாதம் தந்தருள்வார்.

3. சிறு குழந்தையைப் போல் மனதில் ஸாதனை ஸன்ஸ்காரத்தை பதிய வையுங்கள் !

நம்முடைய மனங்களில் நாமே ஸாதனை என்கிற ஸன்ஸ்காரத்தை பதிய வைக்க வேண்டும். நாம் சிறு குழந்தைகளுக்கு நல்ல பழக்க வழக்கங்களை சொல்லித் தருகிறோம். நம்முடைய மனமும் சிறு குழந்தையைப் போன்றது. மனதிற்கு எப்பொழுதும் ஸாதனை கண்ணோட்டத்தை அன்புடன் சொல்லித் தர வேண்டும்; அப்பொழுது மனம் நாம் சொன்னபடி கேட்கும்.



4. வேண்டாத விஷயங்களைப் பற்றி சிந்திப்பதைக் காட்டிலும் வெவ்வேறான முறைகளில் தெய்வத்துடன் தொடர்பில் இருங்கள் !

தேவையற்ற எண்ணங்களை எண்ணுவதைக் காட்டிலும் தெய்வத்துடன்வெவ்வேறான வழிகளில் தொடர்பில் இருக்க முயற்சி செய்யுங்கள். உதாரணத்திற்கு நாமஜபம் செய்யுங்கள், தெய்வத்துடன் பேசுங்கள், பிரார்த்தனை செய்யுங்கள், தெய்வத்தை நினைவில் இருத்துங்கள், பக்திஉணர்வு பெருக முயற்சி செய்யுங்கள், மனத்தால் ஏதாவது ஒரு கோவிலுக்கு சென்று தெய்வ தரிசனம் பெற்று வாருங்கள். இது போன்ற முயற்சிகளால் வேண்டாத தேவையற்ற சிந்தனைகள் வெளியேறி மனம் லேசாகி ஆனந்தத்தை அனுபவிக்க முடியும்.

5. மாயை என்பது பொய் என்பதால் அதில் மாட்டிக் கொள்ளாதீர்கள்!

ஈச்வரன் ஒருவனே நிரந்தரமானவன்; அவனே சத்யம்; மாயை என்பது பொய். நாம் தனியாக பிறவி எடுத்து வருகிறோம். இறக்கும்போது தனியாகவே செல்கிறோம். அவ்வாறிருக்கும்போது எதற்கு மற்றவற்றில் மாட்டிக் கொள்ள வேண்டும்?

6. குடும்பத்தினருக்கு சேவை செய்யும்போது எம்மாதிரியான ஆன்மீக உணர்வு கொள்ள வேண்டும்?

கணவன், மனைவி, குழந்தை மற்றும் உறவினர் ஆகியோருடன் பழகும்போது மற்றும் அவர்களுக்கு சேவை செய்யும்போது ‘நான் பகவானின் சேவை செய்கிறேன்’ என்ற உணர்வுடன் செய்ய வேண்டும். அதன் மூலம் எந்த விதமான எதிர்பார்ப்பும் ‘நான் செய்கிறேன்’ என்ற கர்த்தா உணர்வும் இருக்காது.

7. நம் குரு இல்லாமல் நாம் எதுவுமே இல்லை என்பதை கவனத்தில் கொள்ள வேண்டும்.

8. நம்மால் சேவையை முடிக்க முடியாதபோது அதைப்பற்றி மற்ற சாதகர்களிடம் மனம் விட்டு அன்புடன் பகிர்ந்து கொள்ளுங்கள்!

உங்களிடம் ஏதாவது ஒரு சேவை செய்ய சொல்லப்படும்போது அதை உங்களால் செய்ய முடியாது எனத் தோன்றினால் உடனே எதிரே உள்ள சாதகரிடம் முடியாது எனக் கூறாமல் அவரிடம் அன்புடன் உங்களின் இயலாமையை பகிர்ந்து கொள்ளவும். அதனால் உங்களால் சேவை செய்ய முடியவில்லை என்றாலும் மற்ற எதிரே உள்ள சாதகருக்கு உங்களின் மீது எந்த எதிர் எண்ணமும் தோன்றாது. மாறாக ஆனந்தமே தோன்றும்.

9. மற்றவரிடம் எதிர்பார்ப்பில்லாத அன்பை செலுத்த கற்றுக் கொள்ளுங்கள்.

–தொகுத்தவர் திருமதி ஊர்மிளா புகன்,
சனாதன் ஆஸ்ரமம், ராம்னாதி, கோவா
தொடர்பு : 9380949626,



ஆன்மீகம் • தத்துவம் • உடல்நலம் • பலன்கள்
புத்தம் புதிய ஆன்மீக செய்திகளை தினமும் படியுங்கள்
www.aanmeegamalar.com
ஆன்மிகமலர்.காம்
www.aanmeegamalar.com




ஆசிரியர், வெளியீட்டாளர்
C.நாகராஜன்
செல்: 8825844033

இணை ஆசிரியர்
முருகன் செல்: 7338881773

துணை ஆசிரியர்கள்
ஷியாம்சுந்தர், சஞ்சனா, ஸ்ரீபதி,
குருபிரியா செல்: 9894595909
மூ.சக்திவேல் செல்: 9787576858
புனிதவேல் செல்: 9841807572

வடிவமைப்பு
பான்ராஜாகிராபிக்ஸ்
செல்: 08825844033

நிர்வாக அலுவலகம்
aanmeegamalar.com
நெ.16/18, பாரதீஸ்வரர் காலனி, 4வது தெரு,
கோடம்பாக்கம், சென்னை 600024.
08825844033



## ஆசிரியர் குழுவில் நீங்களும் இணையலாம்

நமது ஆன்மிகமலர்.காம் இதழின் ஆசிரியர் குழுவில் இணைந்து செயல்பட உங்களுக்கு வாய்ப்பு தரப்படுகிறது. ஆன்மிகம் சம்பந்தப்பட்ட விஷயங்களை எழுத ஆர்வமுள்ள அன்பர்கள் எங்களை தொடர்பு கொள்ளுங்கள், விளம்பரம் பெற விரும்புபவர்களும் எங்களை தொடர்பு கொள்ளவும். உங்களை எங்களுடன் ஒருவராக இணைத்துக் கொள்கிறோம்.

தொடர்பு கொள்ளவும்
08825844033




# கடவுளின் பிரதிபலிப்பு

இராஜராஜேசுவரி – அம்பாள் சொல்கிறாள். கதையைச் சொல்வதற்கு விதையைப் போடனும். இப்போது என்னை பூஜை பண்ணுவதாக நினைத்துக் கொண்டு, என் படத்தின் கீழே ஒரு வாழை இலை போட்டு, விதையைப் போடு! நெல் விதைகளை இறைத்து வை; கால்படி நெல் வாங்கி இறைத்து ஒரு கும்பம் வைப்பார்கள். எதற்கு? விதையைப் போட்டால் தான், கதையைச் சொல்ல முடியும்.

பகவானுடைய கதையைச் சொல்ல வேண்டும் என்றால் விதையைப் போடனும். நமக்கு அம்பாளுடைய கதையை சொல்லத் தெரியாது. அம்பாள் இந்த லோகத்தில் எப்படி ஆவிர்பதிதாள்? ஒரு மனிதனின் மீது எப்படி ஆவிர்பவிக்கிறாள்? மறு அம்மனாக, மாரியம்மனாக வரும்போது எப்படி ஆவிர்பவிர்க்கிறாள்?



‘ஆவிர்பவம்’ – ‘பவம்’ என்றால் உலகம். லோகம். இராஜராஜேசுவரி சொல்கிற விளக்கம் – ‘அவிர்பவம்’ – ‘ஆவிர்பவம்’ என்றாகிவிட்டது. ‘ ஆவிர் ’ என்றால் என் முன்னே யாகம் செய்து கொண்டு இருக்கிற தீ. நான் கொடுத்த பொருள்களை சாப்பிட வேண்டும் என்பதற்காக, ‘ஹவிஸ்’ என்று பெயர் வைத்து, அதை நெய்யோடு கலந்து அக்னியில் போகிறாய்! அதை நான் ஏற்றுக் கொள்கிறேன்! – அவிர்பவம்.

அதை, நீ நெருப்பில் போட்டதை, சாப்பிட்ட பின்பு தான், நான் நெருப்பிலிருந்து வந்தவள். அதை சாப்பிட்டு விட்டுதான் வருவேன். ஆகாரம் ஏதாவது சாப்பிட்ட பிறகுதான், அம்பாள் வருவாள்.

அம்பாளுக்கு முதலில் பிரசாதம் கொடுக்கனும். அதனால் தான் இன்றைக்கு முதலில், விஷயம் தெரிந்தோ, தெரியாமலோ, அம்பாளை பூஜை பண்ணினால், யாருக்காவது ஒருவருக்கு வெற்றிலை பாக்கு கொடுத்து விட்டு, எழுந்திருக்கவேண்டும்.

‘பகவத் பூஜை, பகவத் சேவை – பகவதி சேவை’ என்று கேரளத்தில் பெயர். பகவத் சேவை – பகவதி சேவைக்கு அற்புதமான சாப்பாடுகள் நிவேதனம் பண்ணிப் போடவேண்டும். ‘பகவத் சேவை’ பண்ணினால் அம்பாள் வந்துவிடுவாள். ஏன்? அம்பாள் நெல்லின்/தான்யத்தின் வடிவமாக இருக்கிறேன். அம்பாள் உன்னடைய நாக்கின் வடிவமாக இருக்கிறேன் என்று சொல்ல, தான்ய வடிவில் இருக்கிறேன் என்று அக்னியில் போடச் சொன்னேன்.

தான்ய வடிவமாக இருக்கிறேன்; வலிமையின் வடிவமாக இருக்கிறேன் என்று சொல்லி, உன் உடம்பில் 100% வலிமையைக் கொடுக்க வேண்டும் என்பதற்காகத்தான், வலிமைக்கு ஆதிகாரணமாய் இருக்கின்ற நெய்யை உருக்கி, அக்னியில் விடு! என்று சொன்னேன்.

‘ஆவிர்பவம் ஆவாஹயாமி ஸ்வாஹா:’

– ஞானச்சேரி ஞானிகள் –

பூஜ்ய ஸ்ரீசத்குரு சதாசிவ பிரும்மேந்திரரின் அருளுரையிலிருந்து தொகுத்தது மேலும் விபரங்களுக்கு
எஸ்.மகாதேவன், போன் 098410 28028

## ஞானிகளின் பொன்மொழிகள்...

- மிக சாதுர்யத்துடன் பூஜைகள் செய்வதற்கு நான் சமர்த்தன் இல்லை. ஜபம் முதலான செய்யவும் எனக்கு மனமோ பலமோ இல்லை. பலம் உள்ளவர்களுக்குள் மேன்மையானவரே! ஸ்ரீ சதாசிவ பிரும்மேந்திரரே! காரிய காரணமற்ற கருணையை என்பால் செலுத்தவேண்டும் என வேண்டி நமஸ்கரிக்கிறோம்.
- உலகத்தில் பெரும்பாலும் பலர் வாச்சா ஞானிகளாக பேச்சிலே ஞானிகளாக இருக்கிறார்கள். நிஷ்டையுடன் சதாசர்வகாலமும் ஞானமுடன் விளங்கும் தங்களைத் தவிர யாரையும் பார்த்ததும் இல்லை. ஞானக்களஞ்சியமே உம்மை நமஸ்கரிக்கிறோம்.
- கொஞ்சம் பூஜித்தாலேயே சந்தோஷமடைபவரும், பரமசிவனின் மற்றொரு ரூபமானவரும், நமஸ்காரம் செய்வபவர்களின் துக்கத்தை உடனே போக்குபவருமான சதாசிவ பிரும்மேந்திரரை நமஸ்கரிக்கிறோம்.
- நான் புலன்களை அடக்கியவனல்ல. பூஜை, பஜனை முதலியவைகளை செய்பவனும் அல்ல. கருணைக்கடலே! உம்முடைய இயற்கையான கருணையால் எங்களை காப்பாற்றும்.
- உம்மை வணங்குபவர்களில் கடைசியாக உள்ளவனும். குறைந்த ஞானமுள்ள என்னாலே செய்யப்பட்ட சுலோகங்களால் எளிதில் திருப்தி அடையும் ஞான சிரேஷ்டரே! உம்மை சத்குருஸ்ரீ சதாசிவ பிரும்மேந்திரரை சிரம் தாழ்ந்து நமஸ்கரிக்கிறோம்.



ஆன்மிகமலர் மெயில் புக்

# கிருஷ்ணர் வணங்கும் ஆறுபேர்

நாம் எல்லோரும் கிருஷ்ண பரமாத்மாவை வணங்குகிறோம். ஆனால் கிருஷ்ணரும் யார் யார் யாரையோ கும்பிடுகிறார். வியப்பாக இருக்கிறது அல்லவா? கள்ளக் கிருஷ்ணனின் இந்த ரகசிய செயலைக் கண்டு பிடித்தது வேறு யாரும் இல்லை. கிருஷ்ணனின் மனைவி ருக்மிணிதான் இதைக் கண்டுபிடித்தார்.

ஒரு நாள் கிருஷ்ணரும் வழிபாடு செய்வதைப் பார்த்துவிட்டு, “அன்பரே! நீர் யாரையோ வணங்குவது போலத் தெரிகிறது. அவர்கள் யார்? என்று கேட்டாள்.

கிருஷ்ணர் பதில் சொன்னார்:

“நித்யான்ன தாதா, தருணாக்னிஹோத்ரி, வேதாந்தவித், சந்திர சஹஸ்ர தர்சீ, மாஸோபாவாசீச, பதிவ்ரதா ச ஷட் வந்தனீயா மம ஜீவ லோகே”

பொருள்: இந்த மனிதர்கள் வாழும் பூமியில் நான் ஆறு வகையான மக்களை வணங்குகிறேன்:

1. தினமும் அன்னதானம் செய்வோர்,
2. தினமும் அக்னிஹோத்ரம் செய்வோர்,
3. வேதாந்தம் அறிந்தவர்கள்,
4. சஹஸ்ர சந்திர தரிசனம் செய்து சதாபிஷேகம் செய்துகொண்டோர்,
5. மாதா மாதம் உபவாசம் இருப்போர்,
6. பதிவ்ரதையான பெண்கள்.

அவர் சுருக்கமாகச் சொல்லி முடித்தாலும், பெரியோர்கள் இதற்குச் சொல்லும் விளக்கத்தை நாம் அறிந்தால்தான் அந்த ஆறு வகையான மக்களின் முழுப் பெருமையையும் நாம் அறிவோம்:

## 1. நித்ய அன்ன தாதா:

அந்தக் காலத்தில் ஒருவருக்குக் கிடைக்கும் வருமானத்தில் அல்லது நிலத்தில் அறுவடையாகும் விளைச்சலில் ஆறில் ஒரு பகுதியை மன்னருக்குக் கொடுத்து விட வேண்டும். மீதி ஐந்து பகுதிகளை அவர் ஐந்து பேரைப் பாதுகாக்கப் (பஞ்ச யக்ஞத்துக்கு) பயன்படுத்தவேண்டும். திருவள்ளுவரும் கூட:

தென்புலத்தார், தெய்வம், விருந்து, ஒக்கல், தான் என்று ஆங்கு ஐம்புலத்து ஆறு ஓம்பல் தலை (43)

பொருள்: இறந்து போய் தென் திசையில் வாழ்ந்து கொண்டிருக்கும் நம் முன்னோர்கள், கடவுள், வீட்டிற்கு வரும் விருந்தாளிகள், சுற்றத்தார் (இதில் நாம் வளர்க்கும் பசு முதலிய பிராணிகளும், வீட்டில் ஊர்ந்து செல்லும் எறும்புகளும் அடங்கும்), தனது குடும்பம் என்ற ஐந்து பேரையும் போற்றுவது இல்வாழ்வானின் தலையாய கடமை.

மனு ஸ்மிருதியில் 372–ல் மனு சொன்னதை வள்ளுவரும் சொல்லி இருக்கிறார்.

அதிதி தேவோ பவ: (விருந்தாளி என்பவன் இறைவனுக்குச் சமம்) – என்று வேதம் கூறுகிறது.

அந்தக்காலத்தில் தான் உண்பதற்கு முன்னால் வாசல் திண்ணையில் சிறிது நேரம் உட்கார்ந்து யாரேனும் விருந்தாளிகள் அல்லது வழிப்போக்கன் வருகிறார்களா என்று பார்த்துவிட்டே உணவருந்த செல்வார்கள்.

## 2. தருண அக்னிஹோத்ரி:

அந்தக் காலத்தில் ஏழு வயதில் பூணூல் போட்டவுடன் பிராமணச் சிறுவர்கள் சமிதாதானம் என்று தினமும் அக்னி வளர்த்து சமித்துக்களை நெய்யுடன் அக்னியில் ஆகுதி கொடுப்பார்கள். குருகுலம் முடித்து வீட்டுக்கு வந்தவுடன் இளைய பருவத்திலேயே திருமணமும் நடந்துவிடும். பின்னர் அவர்கள் தினமும் ஔபாசனம் என்ற அக்னி காரியத்தைச் செய்து வருவர்.

இதை தவிர அக்னிஹோத்ரம் என்ற அக்னி காரியம் சூரியனை உத்தேசித்து சரியாக சூரியன் உதிக்கும் காலத்திலும் அஸ்தமனம் ஆகும் காலத்திலும் நடத்த வேண்டும். இதை எல்லோரும் செய்துவிட முடியாது. தனது தந்தை ஒரு அக்னிஹோத்ரியாக இருந்தால் மட்டுமே தானும் அக்னிஹோத்ரம் செய்யமுடியும். இவர்கள் காணக்கிடைப்பது அபூர்வம். இப்படித் தவறாமல் செய்துவரு வோரை கிருஷ்ணனே வணங்குகிறார் நாம் வணங்கத் தயக்கம் உண்டோ!

## 3. வேதாந்த வித்:

வேதங்கள் நான்கு. அதன் முடிவில் இருப்பது உபநிஷத் (வேத+ அந்தம்/முடிவு). அதை உணர்ந்தவர்கள் வேதாந்திகள். அஹம் பிரம்மாஸ்மி, தத்வம் அஸி போன்ற ஞான உணர்வு படைத்தவர்கள். வேதாந்தத்தில் நாட்டம் ஏற்பட வேண்டும் என்றால் பலகோடி ஜென்மங்களில் புனியம் செய்து இருக்க வேண்டும். உலக விஷயங்களை துறந்து வேதாந்த விஷயங்களுக்காகவே தன் வாழ்வை அர்ப்பணித்து வேதாந்த சிந்தனையிலேயே வாழ்வை கழிப்பவன் வேதாந்த வித்.

அந்த வேதாந்திகளையும் கிருஷ்ணன் வணங்குகிறார்! இவர்களும் காணக்கிடைப்பது அபூர்வம்.

## 4. ஆயிரம் பிறை கண்ட அபூர்வ சிகாமணி:

சிவனுடைய தலையில் இருப்பது மூன்றாம் பிறைச் சந்திரன். அதை மாதம் தோறும் அமாவாசைக்குப் பின்னர் மூன்றாம் நாளில் காணலாம். அடுத்த முறை காண 29 நாட்கள் காத்திருக்க வேண்டும் இப்படி ஆயிரம் முறை காண 81 ஆண்டுகள் பிடிக்கும். அப்பொழுது அவர்கள் சதாபிஷேகம் செய்து கொள்வார்கள். அத்தகையோரையும் கண்ணபிரான் வணங்குவார். இந்த பிறைச் சந்திரனைக் காணும் வழக்கத்தை ஏனைய மதத்தினரும் நம்மிடமிருந்து கற்றனர்.

ஒருவர் ஆயிரம் முறை சந்திரனைக் காண வேண்டுமானால் ஆயிரம் தடவை சிவனை நினைத்திருக்க வேண்டும். அடடா! மேகம் மறைக்கிறதே. இன்னும் சந்திரனைக் காணவில்லையே என்று ஏங்கி சிவனை நினைத்து நிற்பர். இன்னும் பலர் அவர்களது இஷ்ட தெய்வத்தையும் குல தெய்வத்தையும் வேண்டிக் காத்திருப்பர். ஆகையால்தான் கிருஷ்ணன் அவ்வளவு மதிப்பு தருகிறான்.

## 5. மாத உபவாசி:

மாதம் தோறும் இரண்டு ஏகாதசிகளிலும் உபவாசம் – உண்ணா நோன்புஷிகடைப் பிடிக்க வேண்டும். அதையும் ஒழுங்காகக் கடைப்பிடிக்க வேண்டும். சுத்த உபவாசம் என்பது நிர்ஜலமாக (தண்ணீர் கூட பருகாமல்) அல்லது தண்ணீர் மட்டுமே பருகி உபவாசம் இருப்பது. இப்படி இருப்போர் கண்ணனால் வணங்கப் படுவர். இது எளிதல்ல.இப்படி இருப்போர் மிகமிகக் குறைவு. அவர்களை நாமும் வணங்குவோம்.



**6. பதிவ்ரதை:** இறுதியாக கண்ணன் கை எடுத்துக் கும்பிடுவது யாரை என் றால் *பதிவ்ரதா விரதம் அனுசரிக்கும் கற்புக் கரசிகளை!* உலகில் வேறு எங்கும் இல்லாத ஒரு அணுகு முறை இந்து மதத்தில் மட்டும் உண்டு. சாத்திரத்தில் சொல்லபட்ட எல்லா விஷயங்களையும் மூன்று வகையில் அனுஷ்டிக்க வேண்டும்.

தொகுப்பு: புஷ்பகலா

# “ஆ(ம)ஹா பாரதம்”

பரீக்ஷித் மன்னரின் செயலைக் கண்ட க்ருசன், ச்ருங்கியிடம் அதனை தெரிவித்த போது கோபம் கொண்ட ச்ருங்கி உடனே சபித்து விடாமல் நடந்த விவரத்தை முதலில் அறிந்துக் கொள்ள எண்ணியவனாய் “நண்பா! இறந்தப் பாம்பை சுமந்ததின் காரணம் என்ன? என்று கேட்டான்.

மனித மனம் கோபப்படும் போது அவசரத்தில் விசாரிக்காமல் எதையும் செய்து விடாமல், முன்பு நடந்ததை தெரிந்துக்கொண்டு பின் செயலில் இறங்க வேண்டும் என்பது ஒரு செய்தி.

“பரீக்ஷித் மன்னனே அதை உன் தந்தையின் கழுத்தில் போட்டார் “ என்றான் க்ருசன்.

“என் தந்தை செய்த தவறு என்ன?” என்று கேட்டான் ச்ருங்கி.

நடந்தவைகளையெல்லாம் கேட்டுத் தெரிந்துக் கொண்டதும் ச்ருங்கியின் கண்கள் சிவந்தன. நீரை கையில் எடுத்துக் கொண்டு “என் தந்தையின் நிலையை அறிந்துக் கொள்ளாமல் அவரது தோள் மீது இறந்த பாம்பை வைத்த பாவாத்மாவான, ப்ராம்மணனை அவமதிப்பவனுமான குருகுல பாவி பரீக்ஷித்தை இன்றிலிருந்து ஏழாம் நாள் தீவிர விஷம் மிகுந்த சர்ப்பமான தக்ஷகன் என் சொல்லால் தூண்டப்பட்டு (அவனை) யம லோகத்திற்கு அனுப்புவான்” எனக்கு கூறி சாபமிட்டான்



பரீக்ஷித் மன்னன் புண்ணியாத்மா. அவனது ஆட்சியில் பாவம் சம்பவிக்காது என்ற நிலை இருக்க. ஒரே நிமிடத்தில் அது மாறிப் போய் அவன் பாவாத்மாவாக அறிவிக்கப்பட்டு விட்டான். காலம் தன் செயலை செய்யத் துவங்கி விட்டால் பாவமாவது, புண்ணியமாவது. மனிதர்கள் இதை எப்போதும் நினைவில் வைத்திருக்க விரும்புவதில்லை.

சாபமிட்ட ச்ருங்கி தன் தந்தையைக் காண வந்தான். தந்தை அதே கோலத்தோடு இருப்பதைக் கண்டு மேலும் ரோஷமடைந்தான். அதே ரோஷத்தோடு தந்தையிடம் தான் சாப மிட்டதை தெரிவித்தான்.

ச்ருங்கி தெரிவித்ததைக் கேட்ட தந்தையான சமீகர் ச்ருங்கியிடம்“மகனே! நீ என்ன காரியம் செய்து விட்டாய்? எனக்கு விருப்பமில்லாததை செய்து விட்டாய். தவசிகளின் தர்மம் இது வல்ல. நாம் அவரது நாட்டில் வாழ்கிறோம். அவரே நம்மை ரக்ஷிக்கிறார். சாதுக்கள் குற்றத்தை மன்னிக்க வேண்டியவர்கள். தர்மத்தை அழிப்பவன் மனிதனை அழிக்கிறான். மன்னர் நம்மை காக்காமல் போனால் நாம் துன்பம் அடைவோம். நமது தர்மங்களை நம்மால் சரிவர செய்ய முடியாது போகும். அது மட்டுமின்றியு மது புண்ணிய காரியங்களில் மன்னருக்கும் பங்கு உண்டு. அவர் நம்மால் சபிக்கப்படக் கூடியவரல்ல. முன் பின் யோசிக்கத் தெரியாத உன் முட்டாள்தனத்தால் மிகப் பெரிய தீங்கு நேர்ந்துவிட்டது” என்று தெரிவித்தார்.

அனுபவ முதிர்ச்சி யானது அமைதியை கடைபிடிக்க, அனுபவ மற்ற நிலையானது கோபத் தால் கொந் தளித்து விட்டது.

சமீகரின் கருத் தைக் கேட்ட ச்ருங்கி “ தந்தையே! நன்மையோ தீமையோ, உங்களுக்கு பிடித்ததோ பிடிக்கவில்லையோ ஏதும் நானறியேன். நான் கூறியது பொய் ஆகாது. இந்த சாபம் விலகாது. நான் விளையாட்டாகவும் கூட பொய் கூறியவனல்ல எனும் போது இதில் பொய் கூறுவேனோ? ஆதலால் என் சாபம் பொய்க்காது” என்று தெரிவித்தான்.



பாகம் 24

சமீகர் மகனிடம் “நீ மிகவும் ஸத்ய சந்தன், உக்ரமானவன். இந்த சாபம் பொய்க்காது என்பதெல்லாம் நானும் அறிவேன். ஆயினும் வளர்ந்து விட்டாலும் மகனுக்கு தந்தை சொல்ல வேண்டிய நல்ல விஷயங்களை உபதேசித்து நல்ல குணம் படைத்தவனாய் செய்ய வேண்டியது தந்தையின் கடமை என்பதால் சொல்கிறேன்.

மேலும் நீ சிறுவன். தவத்தில் திவ்ய சக்தியைப் பெற்றவன். பிரபாவ சாலி யின் கோபம் அதிகரிக்கத்தான் செய்கிறது.

உன் கோபமும் அப்படியே. இருப்பினும் இது உனது பால பருவம் என்பதால், உன் அசட்டுத்தனத்தால் உனக்கு உபதேசிக்க வேண்டிய வைகளை. உபதேசிக்க வேண்டிய தருணம் இது என்றெண்ணியே உபதேசிக்கிறேன்.

முதலில் உனது கோபத்தை அடக்கப் பழகிக் கொள். காய், கனி, கிழங்குகளை உண்டு கோபத்தை அடக்கினால் உன் தர்மம் வீணாகாது. சாதகர்கள் மிகவும் கஷ்டப்பட்டு சம்பாதித்த தர்மத்தை கோபம் வீணாக்கி விடுகிறது. தர்மம் இல்லாதவரின் கோபத்தாலோ நல்ல கதி கிடைப்பதில்லை. அடக்கமுள்ள சாதகளே புகழை அடைகிறான். பொறுமையே இக பர உலகங்களுக்கு நன்மை தரும். மனதை அடக்கி பொறுமையாக இருந்தால் பிரும்மலோகம் அடையலாம்.

நீ செய்திருக்கும் செயலால் அவதியுறும் நான், முதலில் இழந்திருக்கும் அமைதியை அடைகிறேன். என் புத்திரனின் மூடத்தனத்தால் விளைந்த இந்த சாபத்தைப் பற்றிய செயலை மன்னருக்குத் தெரிவிக்கச் செய்கிறேன்” என்று கூறி முடித்தார்.

கௌரமுகன் எனும் தனது சீடன் மூலமாய் நடந்தவைகளையெல்லாம் மன்னருக்கு எடுத்து சொல்ல அனுப்பி வைத்தார்.

கௌரமுகனும் அரசரை சந்தித்து நடந்தவைகளை எடுத்துப் பேசினார்.

“மன்னரே! சமீக முனிவர் மௌன விரதம் இருக்கையில், தாங்கள் செய்த செயலைக் கண்டு கோபம் தவிர்த்தார். ஆயினும் அவரது மகன் தங்களை சபித்து விட்டான். அதன்படி இன்றிலிருந்து ஏழாம் நாள் தக்ஷகன் எனும் நாகத்தால் தாங்கள் மரணமடைய வேண்டும் என்றிருக்கின்றபடியால் தாங்கள் தங்களை காத்துக் கொள்ளும்படி தெரிவிக்கச் சொல்லி சமீகர் என்னை அனுப்பி வைத்தார்.

மகனின் கோபத்தை தந்தையான சமீகராலேயே சாந்தப்படுத்த முடியாததால் தான் என் மூலமாக உங்களுக்கு இச்செய்தியை தெரிவிக்கச் செய்தார்” என்று சொல்லி முடித்தார்.

கௌமுகன் மூலம் சாபத்தை கேட்ட பரீக்ஷித் மள்ளனுக்கு தனது மரணச் செய்தியை விட, தன் மீது அன்புக் கொண்டிருக்கும் ஒரு முனிவருக்கு தான் செய்த அடாத செயல்தான் மிகவும் வருத்தம் தந்தது. சமீக முனிவர் இங்கு

வந்து எனக்கு அருள் புரிய வேண்டுவதாக கௌமுகரிடம் செய்தி சொல்லி அவரை அனுப்பி வைத்தார்.

இனி காலங்கடத்த விரும்பாமல் மந்திரிகளுடன் சேர்ந்து ஆலோசனை நடத்தினர். பின்னர் மந்திரிகளின் ஆலோசனைப்படி ஒரே கம்பத்தில் நிற்கும்படியாக உயரமான ஒரு மாளிகைக் கட்டினர். அதில் பல வித மூலிகைகள், மருத்துவர்கள், மந்திரத்தில் தேர்ந்த பிராமணர்கள் மற்றும் பாதுகாப்பிற்கான பாதுகாவலர்கள் என அனைத்தும் இருக்கும் படி செய்தனர்.

உயிர்போகப் போவது நிச்சயம். முனிவரது சாபம் பலித்தேத் தீரும் என்பது பரீக்ஷித் மன்னருக்கு நிச்சயம் தெரியும். தெரிந்தும் இத்தனை பாதுகாப்புகள் ஏன்? எனில், சமீகர் தன் சீடன் மூலமாய் பாதுகாத்துக் கொள்ளச் சொல்லி அனுப்பி வைத்தாரே. அவரது சொல்லுக்கு ஒரு மதிப்புத் தர எண்ணியிருக்கலாம்.

அந்த மாளிகையில் இருந்தபடியே மந்திரிகள் மூலமாய் அரசாங்க வேலைகளை கவனித்து வந்தார். மன்னரை சந்திக்க யாரும் அனுமதிக்கப்படவில்லை. சுருக்கமாய் காற்றும் உள்ளே புகாதபடி பார்த்துக் கொண்டனர்.

ஆறு நாட்கள் கடந்து சரியாக ஏழாவது நாள் வந்தது. தக்ஷகன் என்னும் நாகத்தால் பரீக்ஷித்மன்னனின் உயிருக்கு ஆபத்து என்ற செய்தியை கேள்விப்பட்ட கச்யபர் எனும் அந்தணர் ஒருவர் மன்னரை அதிலிருந்து காப்பாற்ற வந்துக் கொண்டிருந்தார்.

கச்யபர் வருவதைப் பற்றி அறிந்த தக்ஷகன், வயதான அந்தணர் வடிவமெடுத்து கச்யபர் வந்துக் கொண்டிருக்கும் வழியில் நின்றுக் கொண்டிருந்தான். கச்யபர் அருகில் வந்ததும் “என்ன காரியத்தை முடிப்பதற்காக இவ்வளவு வேகத்தோடும், ஆர்வத்தோடும் சென்றுக் கொண்டிருக்கிறீர்” என்று கேட்டான்.

“தர்மாத்மாவான பரீக்ஷித் மன்னர் பூமியில் நீண்ட காலம் வாழ வேண்டும். நெருப்பைப் போன்றவனான தக்ஷகன் தீண்டினாலும் அடுத்த கணமே நான் அவ்விஷத்தை இறக்கி மன்னரை பிழைக்க வைத்து விடுவேன்.” என்றார்

விஷயத்தை அறிந்துக் கொண்ட தக்ஷகன் “பிராம்மணரே ! நான்தான் தக்ஷகன் என்னால் தான் மன்னர் உயிர் துறக்கப் போகிறார். ஆதலால் நீர் போகலாம். இதுவரை நான் தீண்டி யாரும் பிழைத்ததில்லை. வீணாக சிரமபடாமல் சென்று விடுங்கள்.” என்றான்.

பதிலுக்கு கச்யபரும் “நீ தீண்டியப் பிறகு மன்னரை நான் நிச்சயம் எழுப்புவேன். என் வித்தையின் மீது எனக்கு முழுமையான உறுதி இருக்கிறது.” என்றார்.

தக்ஷகனுக்கு கச்யபரின் மந்திர வித்தையின் மீது ஒரு சந்தேகம் இருந்திருக்கும். அதனால் தான் வழியிலேயே அவரைத் தடுத்து அவரது மந்திரபலத்தை பரிசோதிக்க பார்க்கிறான். எப்படி பரிசோதிப்பது என்பதற்கான விடையையும் அவனே உருவாக்குகிறான்.

கச்யபரே ! நான் தீண்டும் உயிர்களை உம்மால் பிழைக்க வைக்க முடியும் என்பது உண்மையானால் இதோ இந்த மரத்தை நான் தீண்டிப் பொசுக்கி விடுகிறேன். உன் மந்திரபலத்தால் அதை மீட்டுக் கொண்டு வா பார்ப்போம். என்று சொல்லிக் கொண்டிருக்கும் போதே தக்ஷகன் பக்கத்திலிருந்த ஆலமரத்தை தீண்டிப் பொசுக்கி விட்டான். பிறகு கச்யபரிடம் இனி நீ முயற்சி செய்து பிழைக்க வை பார்ப்போம்.” என்றான்.

பொசுக்கப்பட்ட சாம்பலையெல்லாம் ஒன்று திரட்டிக் கொண்ட கச்யபர் “தக்ஷகனே ! இதோ என் மந்திரபலத்தைப் பார் என்று கூறிவிட்டு மந்திர பிரயோகம் செய்யலாளார். சாம்பலிலிருந்து முளை விட்டு, கிளைவிட்டு, மரமாகி முன்பு போல் கம்பீரத்துடன் காட்சியளித்தது ஆலமரம். இப்போது என்ன சொல்கிறாய்” என்றார் கச்யபர்.

ஆடிப் போயிருப்பான் தக்ஷகன். அவன் சொன்னது போல் இதற்கு முன் தன்னால் தீண்டப்பட்ட எந்த ஜீவனும் இதுவரை உயிர்ப் பெற்று எழுந்ததில்லை. இப்படி ஒரு வித்தைப் பெற்ற பிராம்மணரை அவன் சந்தித்ததுமில்லை. அவனது சந்தேகம் கச்யபர் விஷயத்தில் உண்மையாயிற்று. அடுத்து என்ன செய்வது........?

அடுத்த இதழில்....

- **Thali**, Ph:09786223577

aanmeegamalar.com
இணையதளத்தின் செய்திகளை
dailyhunt
மொபைல் அப்பில் உடனுக்குடன்
தெரிந்து கொள்ளலாம்.



# ஞானம் என்பது என்ன ??

1 இந்த உலகால் தனக்கு ஒரு பயனுமிலை என்று தெரிந்து வைத்திருத்தல்

2 இந்த உலக கல்வியால் செல்வத்தால் உறவால் தனக்கு ஒன்றும் ஆகப்போவதில்லை என்றறிந்து வைத்திருத்தல்

3 தன் முயற்சியால் சாதனம் அதில் அனுபவம் வரப்போவதில்லை என்று அறிந்து வைத்திருத்தல்

4 ஆன்மா திருவடி அருள் தான் தன்னை மேலேற்றும் என்று நம்பி இருத்தல்

5 இந்த உலகம் நிலையான தன்மை கொண்டதல்ல என்றறிந்து ஆன்மா தான் நிலையானது மாறாதது என்று அறிந்து வைத்திருத்தல்

6 ரெண்டாக பிளவாக பார்க்காமல் முழுமையாக ஒன்றாகப் பார்த்தல்

7 தான் பூரணமான ஆன்மா என்று அறிந்து வைத்திருத்தல்

8 சரணாகதி தான் தன்னை மேலேற்றும் என்று நம்பி இருத்தல் என்று அறிந்து வைத்திருத்தல்

மற்றவர்களும் பயன்பெற
அறிமுகப் படுத்துங்கள்....

அற்புதமான கருத்துக்களைக் கொண்டு வெளிவரும் நமது இதழை உங்களுக்கு தெரிந்த நண்பர்கள், உறவினர்களும் படித்து பயன்பெற, அவர்களுக்கும் அறிமுகப்படுத்துங்கள்.
நமது இதழில் நிறை குறைகளை எங்களுடன் பகிர்ந்து கொள்ளுங்கள்.

உங்கள் கருத்துக்களை கீழ்காணும் தொலைபேசி எண் மற்றும் வாட்சப் எண் மற்றும் இ-மெயில் முகவரியிலும் தெரியப்படுத்தலாம்
whatsapp: 8825844033
aanmeegamalar@gmail.com

# பண வரவிற்கு எளிய பரிகாரம்

பணக்கஷ்டத்தால் அவதிப்படுபவர்களின் பிரச்சனை உடனடியாக தீர கீழே கொடுக்கப்பட்டுள்ள மந்திரத்தையும் பரிகார முறையை செய்து வந்தால் பலன் கிடைக்கும்.

தொடர்ந்து ஆறு வெள்ளிக்கிழமைகள் காலை ஆறு முதல் ஏழு மணிக்குள் அல்லது மதியம் ஒன்றிலிருந்து இரண்டு மணிக்குள் அதுவும் இயலாதோர் இரவு எட்டு முதல் ஒன்பது மணிக்குள் கீழ்காணும் பரிகார முறையை செய்து வர திடீர் பண வரவு உண்டாகும். செல்வ நிலை உயரும்.

இருபது மொச்சை கொட்டைகளை சிறிது சர்க்கரை சேர்த்து வேக வைக்கவும். குழைந்து விடக்கூடாது. முழு மொச்சைகளாக தெரிய வேண்டும். அவற்றை ஒரு வெள்ளை துணி அல்லது கைகுட்டையில் இட்டு முடிச்சு அவிழுமாறு லேசாக கட்டிக்கொள்ளவும். பின்பு கீழ்க்கண்ட மந்திரத்தை ஆறு முறை கூறி முடித்து அதை ஓடும் நீர்நிலைகளில் விட்டு விடவும். கைமேல் பலன் தரும் சிறந்த தாந்த்ரீக பரிகாரம் இது.

மந்திரம் :
ஓம் ஸ்ரீம் ஹ்ரீம்
ஸ்ரீம் கமலே கமலாலயே
ப்ரஸீத ப்ரஸீத ஸகல
சௌபாக்யம் தேஹி தேஹி
ஓம் ஸ்ரீம் ஹ்ரீம் ஸ்ரீம்
ஓம் மஹாலக்ஷ்ம்யை நமஹ

– மு.கிருஷ்ணா மோகன்
போன்: 08526223399 / 9843096462

## விதுர நீதி

# வாழ்க்கையே இவ்வளவுதான்...

**காமத்தையும், வாயுணர்வையும்**
**உள்ளத்து வலிமையைக் கொண்டு அடக்கி ஆள வேண்டும்.**

**கைகளையும், கால்களையும்**
**கண்களின் உதவியால் கட்டுப்படுத்த வேண்டும்.**

**கண்களையும் செவிகளையும்**
**மனத்தால் வசப்படுத்த வேண்டும்.**

**சிந்தனையையும், பேச்சையும்**
**செயல்களின் கட்டுப்பாட்டின் கீழ்வைத்திருக்க வேண்டும்.**



விதுரரிடம் ஆலோசனை கேட்கும் ஒரு மன்னனுக்கு வாழ்வின் எதார்த்தமான உண்மைகளையும், மனித மனத்தை அடக்கும் விதத்தையும் மிக அழகாக எடுத்துக்கூறினார் விதுரர். அவர் கூறிய அனைத்தையும் “விதுர நீதி” என்று அழைப்பார்கள்.

அதன்படி விதுரர் மன்னனிடம் கூறிய ஒருசில வார்த்தைகள்.... கீழே தரப்பட்டுள்ளது....

எத்தனை மாவீரர்கள், மாமன்னர்கள் கடந்த காலத்தில் தோன்றியிருக்கின்றனர்!

செல்வத்திலும், மற்றவகைச் செல்வங்களாலும் நிறைந்து விளங்கிய நிலப்பரப்பை ஆட்சி புரிந்துள்ளனர்.

அவர்களுக்குச் சாவுத் தெய்வம் சலுகைக் காட்டவில்லை. எல்லாவற்றையும் இழந்து சாவுக்கு இரையாகிவிட்டனர்.

நாம், மிகுந்த கவனத்தோடும், முயற்சியோடும் மகனை வளர்த்துபெரியவன் ஆக்குகிறோம். அவன் இறந்துவிட்டால்... என்ன செய்வது? உடலை வீட்டிலிருந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லவேண்டியதுதா.

வீட்டுப் பெண்கள் அலறிப் புலம்புவார்கள் என வீட்டில் பிணத்தை வைத்திருக்க முடியுமா? யார் எப்படி அழுதாலும்... விறகுகள் நடுவே உடலையும் விறகாய் சிதையில் வைக்கவேண்டியதேத் தவிர வேறு வழியில்லை.

வாழ்நாள் முழுதும் உழைத்து இறந்த ஒருவன் திரட்டிய செல்வத்தை வேறொருவன் அனுபவிக்கிறான். நாம் எவ்வளவு சீராட்டி வளர்த்தாலும்... ஐந்து மூலப்பொருட்களால் ஆன இவ்வுடலை பறவைகள் மிச்சமின்றி அழிக்கின்றன...

அல்லது நெருப்பு எரித்துவிடுகிறது.

இறந்தவன், இதுவரை செய்த பாவ புண்ணியங்கள் என்றும் உடன் வர மேலுலகம் செல்கிறான் மரங்கள் பூப்பதையும், கனிகள் தருவதையும் நிறுத்தி விட்டால் அவற்றைவிட்டு பறவைகள் வேறிடம் சென்றுவிடும்.

அதுபோலவே, ஒருவன் இறந்துவிட்டால்...

அவனால் இனிப்பயன் இல்லை என அவனுடைய மகன்களும், உறவினர்களும், நண்பர்களும் அவன் உடலைச் சுடுகாட்டில் வைத்துவிட்டு வந்து விடுகின்றனர்.

சிதை நெருப்பில் போடப்படுகின்ற இறந்தவனுடைய ஆத்மாவுடன் வருபவை அவன் வாழ்க்கையில் செய்த காரியங்களின் பலன் மட்டுமே...

ஆகவே நாம் எப்படிப்பட்டாவது கொஞ்சம்... கொஞ்சமாகவாவது நற்செயல்கள் செய்து புண்ணியத்தை சேகரிக்க வேண்டும்.

நாம் வாழும் இவ்வுலகில் மேற்பகுதியிலும்... கீழுள்ள பகுதியிலும் வேதனையான இருண்ட உலகங்கள் பல உண்டு.

அவை நம் புலன்களையும் திணறும் அளவிற்குக் கொடுமையானவை.

துரியோதனன் மீதுள்ள பாசம் காரணமாக பாவச்செயல்களுக்கு உடந்தை போய் அந்தக் கொடிய உலகங்களில் தள்ளப்பட்டு மாட்டிக் கொள்ளாதீர்கள்.

மேலுலகங்கள் பூலோகம், சுவர்லோகம், அயர்லோகம், சனலோகம், தபோலோகம், மகாலோகம், சத்தியலோகம்.

கீழுலகங்கள் அதலம், விதலம், சுதலம், தராதலம், மகாதலம், ரசாதலம், பாதாளம்.

அரசே! நான் கூறிய அறிவுரைகளைப் பொறுமையுடன் கேட்டீர்கள். அதன்படி நீங்கள் உண்மையாக நடந்துகொண்டால் இவ்வுலகில் பெரும் புகழ்பெறுவீர்கள். பின்...

இவ்வுலகில் எதற்கும் நீங்கள் பயப்பட வேண்டாம். மேலுலகிலும் அஞ்சும்படி எத்துன்பமும் விளையாது ஆத்மா... ஒரு நதிக்கு சமம். புண்ணியச் செயல்களே அந்நதியில் குளிப்பதற்குரிய இடமாகும்.

சத்தியமே... அந்நதியின்நீர்ப்பெருக்கு.

ஐம்புலன் கட்டுப்பாடே அந்நதியின் கரைப்பகுதி. கருணை உணர்வே அதன் அலைகள். அதில் குளிப்பவன் தூய்மைப் பெற்றுப் புண்ணிய சாலியாகிறான்.

ஏனெனில் ஆத்மா புனிதமானது. ஆசைகளைத் துறத்தலே தலை சிறந்த புண்ணியமாகும்

உலக வாழ்க்கை என்பது ஒரு நதி. அதில் ஐம்புலன் ஆசைகள் தண்ணீராய் உள்ளன. காமம், சினம், என்ற முதலைகள் அதில் நிறைந் துள்ளன.

மீண்டும், மீண்டும் பிறத்தல் என்ற நீர்ச் சுழல்கள் நம்மை அச்சுறுத்துகின்றன.

இத்தகைய பயங்கர ஆற்றை நாம் சுயக்கட்டுப்பாடு என்ற படகின் உதவியோடு கடக்க வேண்டும்

நம்மைச் சுற்றியுள்ளவர்களில் அல்லது உறவினர்களில் யாராவது அல்லது சிலர் விவேகத்திலோ, நற்பண்பிலோ, உலகஅறிவிலோ, வயதிலோ நம்மைவிடமூத்தவர்களாக இருக்கக் கூடும். அப்படிப்பட்டவர்களுக்கு நாம்மரியாதை காட்ட வேண்டும். அவரது தயவைப் பெற்றிட வேண்டும். நாம் ஒரு சூழ்நிலையில் என்ன செய்ய வேண்டும்... என்ன செய்யக்கூடாது என அத்தகைய மூத்தவரிடம் ஆலோசனைப் பெற்று அதற்கேற்ப நடந்து கொண்டால், தவறு செய்ய வாய்ப்பே இல்லை

நாம் காமத்தையும், வாயுணர்வையும் உள்ளத்து வலிமையைக் கொண்டு அடக்கி ஆள வேண்டும். கைகளையும், கால்களையும் கண்களின் உதவியால் கட்டுப்படுத்த வேண்டும். கண்களையும் செவிகளையும் மனத்தால் வசப்படுத்த வேண்டும். சிந்தனையையும், பேச்சையும் செயல்களின் கட்டுப்பாட்டின் கீழ்வைத்திருக்க வேண்டும்.

தொகுப்பு: T.V.ராதாகிருஷ்ணன்

# மரணம் என்பது முடிவல்ல ஒரு முடிவின் துவக்கம்

பிறப்பை கொண்டாடுகிறோம். வயதும், அனுபவமும் வளரும் போது அதை பிறந்த தினமென்று உறவினரும், நண்பர்களும் புடைசூழ கொண்டாடி மகிழ்கிறோம். ஊரிலுள்ள மனிதர்கள் அனைவரும் இறந்து போனாலும் நமக்கு மட்டும் சாவு வரவே வராது என்று உறுதியாக நம்புகிறோம். காலையில் விழித்தது முதல் இரவு உறங்க செல்லும் வரை நான் இன்றும் வாழ்வேன், நாளையும் வாழ்ந்திருப்பேன் என்ற நம்பிக்கையோடு இருப்பவனால் மட்டுமே வாழ்நாளை கொண்டாட முடியும். மரணம் என்பது இன்று வருமோ? நாளை வருமோ? மற்றென்று வருமோ என்று ஒவ்வொரு நாளையும் சாவை வரவேற்கும் நாளாக நினைப்பவன் மழலை மொழியின் இனிமையை ரசிக்க முடியாது. அழகிய மனையாளின் இன்ப மேனியை சுவைக்க முடியாது. தாயின் அரவணைப்பை, தகப்பனின் பாதுகாப்பை சுகிக்க முடியாது. நடைபிணம் போல வாழவேண்டியது தான் என்று பலரும் உபதேசிக்கிறார்கள்.



நமக்கும் கூட இந்த சிந்தனை சரியானதாக தோன்றுகிறது. என்றோ ஒருநாள் சாகப்போகிறோம் என்பதற்காக இன்றே சுடுகாட்டிற்கு சென்று படுத்துக்கொள்ள முடியுமா? இது வாழும் முறையாகுமா? என்று யோசிக்கிறோம். இது சரியா? அல்லது மரணத்தை எதிர்பார்ப்பது சரியா என்று நமக்கு தெரியாது. ஆனாலும் நாம் கௌதம புத்தர் சொன்னது போல நதி நீர் மாறிக்கொண்டே இருக்கிறது. புதிது புதிதாக உருவாகி கொண்டே இருக்கிறது என்பது போல, ஒவ்வொரு வினாடியும் மரணத்தை நோக்கி நகர்ந்து கொண்டே இருக்கிறோம். நாம் விரும்புகிறோமோ, இல்லையோ ஒருநாள் மரண தேவன் வந்து நமது வீட்டு கதவை தட்டத்தான் போகிறான். அன்று நாம் என்ன சமாதானம் சொன்னாலும் அதை காதில் வாங்காமல் நம்மை இழுத்து கொண்டு போகத்தான் போகிறான்.

சீறிவரும் பாம்பை கண்டு அஞ்சுகிறோம். சிலிர்த்து வரும் சிங்கத்தை கண்டு நடுங்குகிறோம். பிரம்மாண்டமான யானையை கண்டு ஓட்டமெடுக்கிறோம். ஆர்ப்பரிக்கும் கடல், அடிவயிற்றை கலக்கும் இடி மின்னல், நெருப்பை கக்கும் எரிமலைகள் எல்லாமே நமக்கு அச்சத்தை தருகிறது. இந்த அச்சம் எதற்காக? நமக்கு வருகிறது. ஒரு நிமிடம், ஒரே ஒரு நிமிடம் நின்று யோசித்து பார்த்தால் உண்மை தெரியும். நாம் எவைகளை பார்த்து பயப்படுகிறோமோ அவைகளால் நமக்கு மரணம் வரும். நமது அச்சம் யானையின் மீதல்ல, யானையால் வரும் மரணத்தின் மீது. இந்த மரணபயம் தோட்டியில் இருந்து தொண்டைமான் வரையில் பேதங்கள் இல்லாமல் அனைவருக்கும் உண்டு.

மரணத்தை கண்டு அஞ்சாத மனிதனே இல்லை. சாகாமல் வாழவேண்டுமென்று ஆசைப்படுகிற மனிதன் அதற்கான வழிமுறைகளை ஆவலோடு பசியாக அழும் குழந்தை ஒன்று தாயின் முலைகாம்பை எப்படி வேகத்தோடு பற்றிக்கொள்ளுமோ அப்படி செய்ய துவங்குகிறான். மரணம் என்று வந்துவிட்டால் பேரறிஞன் கூட பச்சைக் குழந்தையாகி விடுகிறான். அறியாமை இருளில் மூழ்கி விடுகிறான். மரணத்தை சுவைபார்க்க பிறக்காமலும் இருக்கலாம். பிறந்த பிறகு இறக்காமலும் இருக்கலாம் என்ற சூட்சமத்தை தெரிந்தவன் எதற்கும் அஞ்சுவதில்லை. உடல் அழிந்து போனாலும் அதற்காக கலங்குவதில்லை இப்படி கலங்காமல் இருக்கும் யோகிகள் சிலபேரே உண்டு. மற்ற அனைவருமே கலக்கத்தின் கலங்கரை விளக்கங்களே. மரணம் இதற்கு மனிதனுக்கு இத்தனை பயத்தை தருகிறது? காரணம் மரணம் என்பது எப்படி இருக்குமென்று யாருக்கும் தெரியாது. மரணத்திற்கு பிறகு என்ன நடக்கும் என்றும் எவருக்கும் தெரியாது.

மரணம் என்பது ஒரு தனிமனித அனுபவம். நமது மரணத்தை நாம் மட்டுமே உணர முடியும். மற்றவர்களுக்கு அதை உணர்த்த முடியாது. மற்றவர்களும் சாகாமல் உணர முடியாது. தற்கால விஞ்ஞானம் மரணத்தை பற்றி சிறிது விளக்கம் தர முற்படுகிறது ஆனால் அது கூட முழுமையானது அல்ல. உண்மையானது என்றும், நிரூபிக்க பட்டதும் அல்ல.மரணத்தின் போது உடம்பில் திடிரென்று ஏற்படும் வேதியல், இயற்பியல் மாற்றங்கள் வலியையும் அளவிட முடியாத துன்ப உணர்ச்சியையும் தூண்டி விடுகிறது. இதுநாள் வரை அனுபவித்து கொண்டிருந்த இந்த உலகத்தை விட்டு நிரந்தரமாக பிரிய போகிறோமே என்ற துயரம் மரணப்படுக்கையில் இருப்பவனுக்கு ஏற்படுகிறது. இதனால் தான் அவன் அஞ்சுகிறான். மரணத்தைக் கண்டு ஒடுகிறான் என்கிறது விஞ்ஞான தத்துவம்.

ஆனால் மருத்துவம் இதை ஏற்றுக் கொள்வதில்லை. மரணம் மனிதனுக்கு பெரிய உடல் வேதனையை தருவதில்லை. சொத்தைப்பல் ஒன்றை பிடுங்கும் போது




ஏற்படுகிற வலி கூட சாகும் போது ஏற்படாது. காரணம் மரணம் நெருங்க நெருங்க கரியமில வாயு நரம்பு மண்டலத்தை ஆக்கிரமித்து கொள்கிறது. மூளைக்கு செல்கிற நரம்புகளில் மறுப்பு தன்மை ஏற்படுகிறது. இதனால் மனிதனுக்கு மயக்க உணர்வே மிகுந்து நிற்கிறது. தன்னை சுற்றி நடப்பது என்ன தன்னை தாங்கி பிடித்திருப்பவன் யார்? தனக்கு என்ன நேர்கிறது? என்பதை அறியாமல் மயங்கிய நிலையிலேயே மரணம் வருகிறது. மரணம் என்பது வலி மிகுந்தது என்பது வெறும் கற்பனையே அச்சத்தின் வெளிப்பாடே என்று மருத்துவ விஞ்ஞானம் விளக்கம் தருகிறது.

மருத்துவத்தில் இரண்டுவகை உண்டு ஒன்று உடலை கூறுபோட்டு பார்ப்பது மற்றொன்று மனதை கிழித்து பார்ப்பது, மனதை பார்க்கும் மருத்துவத்தை உளவியல் என்று கூறுகிறோம். அந்த உளவியல் மரணத்திற்கு தரும் விளக்கம் சற்று விந்தையானது. சாகும் போது உயிரை பறித்து செல்ல எருமை மாட்டின் மீது எமன் வருவான். எமலோகத்தில் நீ செய்த தப்புகள் எல்லாம் குறித்து வைக்கப்பட்டு, உனக்கு தண்டனை கிடைக்கும். நெருப்பில் போடுவார்கள், எண்ணெய் சட்டியில் போட்டு வதக்கி எடுப்பார்கள், ஆணி படுக்கையில் படுக்க வைத்து சம்மட்டியால் அடிப்பார்கள்.

மிளகாய் வற்றலை ஆசன வாயில் பூசுவார்கள் என்பன போன்ற கட்டுக்கதைகள் மனிதன் மனதில் குழந்தை பருவத்திலேயே திணிக்கப்பட்டுவிட்டது. இந்த கட்டுகதைகளே மரணத்திற்கு ஏற்படும் நரக வேதனையே மனிதனை ஆட்டம் காண வைக்கிறது. இதனால் தான் அவன் சாவதற்கு அஞ்சுகிறான் என்று விளக்கம் தருகிறது.

மரண வேதனை என்பது உண்மையா? மரணத்திற்கு பிறகும் தண்டனை என்பது உண்மையா? அல்லது இவைகள் அனைத்துமே கற்பனையா என்று நமக்கு தெரியாது. ஆனால் ஒன்றும் மட்டும் நமக்கு தெரியும். மரணத்தை கண்டு மனிதன் அஞ்சுகிறான். என்று என்று வருவானோ எமன் என்று அஞ்சாதவன் ஒருவனும் இல்லை. உலகத்தையே புரட்டி போட்ட மாவீரர்கள் கூட மரணத்தின் முன்னால் மல்லாத்தி கிடத்தப்பட்ட குழந்தையை போல ஒன்றும் செய்ய முடியாமல், கைகால்கள் கட்டப்படாமல் இருந்தாலும், செயல்பட முடியாமல் ஒரு பொம்மையை போல ஆகி விடுகிறார்கள். இதனால் தான் என்றோ ஒருநாள் வருகின்ற மரணத்தை எண்ணி இன்றே பயப்பட துவங்கி விடுகிறான். ஒன்றை யோசிக்க வேண்டும் வானத்தை அளக்கும் விஞ்ஞானத்தால், வரும் முன்பே நோய்களை தடுக்கும் மருத்துவத்தால், சுகமாக வாழச்சொல்லி தரும் பொருளாதாரத்தால் மரணம் இல்லாமல் மனிதன் வாழ்வதற்கு வழிவகை செய்ய முடியுமா? மரணத்தை தடுக்க முடியுமா?

மரணம் மரணம் என்று சொல்கிறோமே இந்த மரணம் வருவது யாருக்கு? மனித உடலுக்கா? உயிருக்கா? உடலுக்கு மரணம் என்றால் பஞ்ச பூதங்களால் உருவான எதுவுமே ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு மேல் உருவான தோற்றத்திலேயே இருக்காது. அழிந்து விடும் அல்லது உருவம் மாறிவிடும் எனவே உடம்பிற்கு வருகின்ற மாற்றத்தை மரணம் என்று



சொன்னாலும் அதை தவிர்க்க முடியாது. வந்தே தீரும் ஆயிரம் ஆண்டுகள் உடம்பை பக்குவப்படுத்தி வைத்தாலும் கூட ஒரு நாள் அது இற்று விழுந்தே தீரும். இப்படி செத்தே ஆகவேண்டிய உடம்பிற்காக உடம்பின் மரணத்திற்காக அச்சப்படுவதும், அழுவதும், விசனப்படுவதும், வெம்மி வெடிப்பதும் முட்டாள் தனம் அல்லவா?

உடல் அழிந்து போகும். உயிர் அழியாது என்றால் வாள் கொண்டு வெட்டினாலும், தீயினால் சுட்டாலும், தண்ணீரால் மூழ்கடித்தாலும் ஆத்மா அழியப்போவதில்லை என்றால் எதற்காக நான் அச்சப்பட வேண்டும்? ஒரு மரத்தில் இருக்கும் பறவை இன்னொரு மரத்திற்கு வருவது போல இந்த உடம்பை விட்டு விட்டு வேறொரு உடம்பிற்கு போகப்போகிறேன். அதற்காக நான் ஏன் அழவேண்டும், நாத்திகம் பேசினாலும், நாயகனை போற்றினாலும் என் உயிருக்கு அழிவு இல்லை. உடம்போடு உயிரும் அழிந்து போகும் என்பது மூடத் தனமான விஞ்ஞானம். அழியாத அமிர்தத்தின் குழந்தை என்று வேதம் என்னை அழைக்கும் போது எனக்கு மரணமில்லை என்பது என் ஆன்மாவிற்கு முடிவு இல்லை என்பது தெளிவாகத் தெரிகிறது.

என் அப்பனும், பாட்டனும் நடந்து வந்த பாதையின் படி மரணம் என்பது முடிவல்ல ஒரு முடிவின் துவக்கம் என்பது தெளிவாகிறது.

யோகி ஸ்ரீ ராமானந்த குரு
மேலும் தொடர்பு கொள்ளவும்
போன்: 9442426434

மாதம் இரண்டு முறை இலவசமாக வெளிவரும் “ஆன்மிகமலர் மெயில் புத்தகம்” பெற உங்கள் இமெயில் முகவரியை கீழ்காணும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்
whats-app no: 7299992699
aanmeegamalar@gmail.com

aanmeegamalar.com
இணையதளத்தின் செய்திகளை
dailyhunt
மொபைல் அப்பில் உடனுக்குடன் தெரிந்து கொள்ளலாம்.

ஆன்மிகமலர் மெயில் புத்தகத்தின் அனைத்து புத்தகங்களையும் படித்து மகிழவும் டவுன்லோடு செய்யவும்
www.aanmeegamalar.com
MAGZTER DIGITAL MAGAZINE STORE
TAP • READ • ENJOY
இணையதளங்களை பார்க்கவும்...

www.aanmeegamalar.com

# சகிப்புத்தன்மை என்ற பெயரில் இந்து மதத்தை கூறுபோடும் கரையான்கள்

இறைவனை அடையவும், மக்கள் பக்குவம் அடையவும் பல்வேறு செயல்களை பயின்று வந்த நம் பாரத தேசத்தில், மக்களின் ஒற்றுமையையும், பிரிவையும் ஏற்படுத்தி அதில் குளிர் காய எண்ணிய மாற்று மதத்தினராலும், அவர்களிடம் லாபம் பார்த்த ஒருசில இயக்கங்களாலும், இந்து மதத்தில் உள்ள பல்வேறு கருத்துக்கள் திரித்து கூறப்பட்டது.

தற்காலத்தில் இந்து மதத்தில் உள்ள வழிபாட்டு முறைகள், சங்கீர்த்தனங்களை வெளிப்படையாக கொள்ளையடித்து தங்கள் மதத்தில் புகுத்திவரும் ஒருசிலருக்கு, நம் மதத்தைச் சேர்ந்தவர்களே, பணத்திற்கு ஆசைப்பட்டு நம் மதத்தை அடகுவைக்கும் கயமைத்தனத்தைப் போன்று, அக்காலத்தில் பொன் பொருளுக்கு ஆசைப்பட்டவர்களை வைத்துக்கொண்டு, நமது வேதங்களின் கருத்துக்கள் சிதைக்கப்பட்டது.

அந்தவகையில் புருஷ சூக்தத்தில்,

“பிராமணஸ்ய முகமாஸீத், பாஹூ ராஜன்ய: க்ருத:
ஊரு ததஸ்ய யத்வைஸ்ய:,பத்ப்யாகும் சூத்ரோ அஜாயத”

என்று உள்ள இந்த வரிகளுக்கு ஒருசிலர் தவறான விளக்கங்களை கொடுத்து மக்களிடையே தேவையற்ற ஜாதி பாகுபாட்டை புகுத்தினர்.

“இந்து வேத புருஷனின் முகம் கழுத்து. தொடை, பாதம் போன்றவற்றில் இருந்து சாதி தோன்றியது. எனவே வேதம் சாதிரீதியாக பிரிக்கின்றது” என பிரச்சாரம் செய்தனர்.

இவ்வாறு பிரச்சாரம் செய்தால்தான் இந்து தர்மத்தை தாழ்த்தமுடியும்.

ஆனால் இதன் உண்மையான அர்த்தம் யாதெனில்,

பிராமணன் முகத்தில் பிறந்தான் என்பது தவறு.

பிராமனனுக்கு முகமே பலம். ஏனெனில் வேதம் ஓதும் பிராமணன் முகலட்சணத்தோடு விளங்கவேண்டும். மேலும் வாயால் நல்லாசி வழங்கவும். நல் உபதேசம் செய்யவும், நல் மந்திரம் உச்சாடனம் செய்யவும் முகமே துணை, எனவே பிராமணனுக்கு முகபலம் தேவை.

அதுபோல் ஷத்திரியன் தோளில் பிறந்தான் என்பதும் தவறு.

சத்திரியனுக்கு தோள் பலம் தேவை. ஏனெனில் சத்திரியன் வாள் கொண்டு எதிரிகளிடம் இருந்து மக்களை காப்பாற்றவும், பாதுகாக்கவும், வறியவர்களுக்கு கொடை அளித்து ஆதரிக்கவும் தோள் பலம் கொண்ட கரங்கள் தேவை.

அதேபோல் வைசியன் இடுப்பில் பிறந்தான் என்பதும் தவறு.

வைசியன் உட்கார்ந்த நிலையில் வியாபாரம் செய்பவன். எனவே வியாபாரம் செய்யவும், கணக்கு வழக்குகளை பார்க்கவும் வைசியனுக்கு தொடை பலம்மிக்கதாக விளங்க வேண்டும்.

அதேபோல் சூத்திரன் காலில் பிறந்தான் என்பதும் தவறு.

சூத்திரன் உழவு செய்பவன். உழவு செய்பபவனுக்கு கால் பலம் தேவை. கால்கள் பலமாக இருந்தால் தான் பயிரிடவும் விவசாயத்தை பராமரிக்கவும் முடியும்.

இவ்வாறு புருஷ சூக்தம் கூறும் உண்மையான கருத்தை திரித்து கூறி மக்களிடையே பிரிவு ஏற்படும் விதத்தில் கருத்துக்களை தீயசக்திகள் பரப்பி வந்தன.

பொதுவாகவே தமிழகத்தை பொருத்தவரை 1900 க்கு பின் வந்த அனைத்து நூல்களையும், முக்கியமாக வரலாற்று – சமய நூல்களை படிக்கும்பொழுது அதில் தீயசக்திகள் – வெளிநாட்டு மதத்தினரின் மாயைகள், புரட்டு வரலாறுகள், இடைச்சொருகல்கள் உள்ளதா என்று ஆராய்ந்தே அந்நூலை ஏற்க்கவேண்டும் அங்கீகரிக்கவேண்டும்.

> “1900-க்கு பின் வந்த அனைத்து நூல்களையும், முக்கியமாக வரலாற்று - சமய நூல்களை படிக்கும்பொழுது அதில் தீயசக்திகள் - வெளிநாட்டு மதத்தினரின் மாயைகள், புரட்டு வரலாறுகள், இடைச்சொருகல்கள் உள்ளதா என்று ஆராய்ந்தே அந்நூலை ஏற்கவேண்டும்”

இந்து மதத்தை இன்னும் தாழ்த்தும் விதமாக ஆபாசங்களையும் பயன்படுத்தி, ஒருசில எழுதாளர்கள் மாற்று மதத்தினருக்கு ஆதரவான போக்கை கையாண்டு, வெற்றியும் பெற்றுள்ளனர்.அப்படிப்பட்ட எழுத்தாளர்கள் இந்து மதத்தைச் சேர்ந்த பெயரை சூட்டிக்கொண்டு, மாற்று மதத்தைத் தழுவியவர்களாக இருந்தனர் என்பது உண்மை.

மேற்கண்ட பொய்யும் புரட்டும் இந்துமதத்தைக் குறித்து தாக்கப்படுவதற்கு ஒருவகையில் ஒவ்வொரு இந்துக்களும் காரணமாக இருந்துள்ளோம்.

யானையின் பலம் யானைக்கு தெரியாது என்பது போல நம் மதத்தின் உன்னதத் தன்மையும், மதிப்பையும் நாம் சரியாக அறியாமல் இருந்ததுதான் முக்கிய காரணமாகும்.

நமது வீட்டு பிள்ளைகள், நம் மதத்தில் உள்ள பல கருத்துக்களை அறிந்து கொள்ள நாம் முயற்சி செய்யாமல் விட்டதால்தான், இன்று வெளிநாட்டு கலாச்சாரத்திற்கு அவர்கள் அடிமையானதுடன், மனத்தூய்மையும், உடல் தூய்மையையும் இழந்து தவிக்கின்றனர்.

நமது பலத்தை மற்ற மதத்தினர் கூறுபோட்டு கொள்ளையடிக்கின்றனர்.

இந்து மதத்தில் கோயில்களில் நடப்பட்டிருக்கு கொடிமரமும், வீட்டை செழிப்பாக வைக்க உதவிய காமாட்சியம்மன் விளக்குகளும், கோயில் விசேஷங்களுக்கு ஏற்றப்படும் கொடிமரத்துக் கொடியும், குழந்தை பாக்கியம் பெற கோவில் மரத்தில் கட்டப்படும் தொட்டில் பழக்கத்தையும், இன்று வேறுசிலர் கொள்ளையடித்து தங்கள் மதத்தில் காரண காரியம் தெரியாமல் புகுத்திவருகின்றனர்.

இதன் அடுத்தக்கட்ட கொள்ளை முயற்சிதான், மும்மூர்த்திகள் போற்றிய சங்கீதத் திருட்டு, மனதையும் உள்ளத்தையும் இறைவனிடம் சரணடைய வைக்க நம் முன்னோர் வகுத்த இசையை, இன்று


ஆன்மிகமலர் மெயில் புக்



ஒருசிலர் பொன் பொருளுக்கு விற்பனை செய்ய முன்வந்திருப்பதும், சகிப்புத்தன்மை என்ற போர்வையில் ஒருசிலர் அதற்கு ஆதரவு அளிப்பதும், நம் மதத்திற்கு நாம் செய்யும் மிகப்பெரிய துரோகமாகும்.

அக்காலத்தில் ஒருசில சுயநல அரசர்கள் தங்களைக் குறித்து புகழ்ந்து பாடினால் பொன் பொருள் மட்டுமின்றி ராஜ்ஜியத்தையே தருகிறேன் என்று கூறியும், “இறைவனைப் புகழ்ந்து பாடிய நா... வேறு யாரையும் புகழ்ந்து பாடாது” என்று கூறிய எத்தனையோ வித்வான்கள் கழுவில் ஏற்றிக் கொல்லப்பட்டுள்ளனர்.

சகிப்புத்தன்மை என்பதற்கு பொருள் என்ன என்று தெரியாமல் இன்று பலர் திரிகின்றனர்.

ரோட்டில் அனாதைகளாக, மனநலம் சரியில்லாமல், துணிகளைக் கிழித்துக்கொண்டு திரியும் ஒருசிலரைப் பார்த்திருப்போம், அவ்வாறான பாவப்பட்டவர்களை இனம் கண்டு, அவர்களை குளிப்பாட்டி சுத்தம் செய்து நல்ல ஆடைகளை அணிவித்து, அநாதைகளாக விடப்பட்டவர்களை அழைத்து நமது குடும்ப உறுப்பினரில் ஒருவராக மாற்றிக்கொள்வது என்பதை சகிப்புத்தன்மை என்று கூறலாம்.

அதைவிட்டுவிட்டு ரோட்டில் திரியும் அந்தநபரைப் போன்று நமது குடும்ப உறுப்பினர்களை மாற்றி, அவர்களை அழைத்துக் கொண்டு, ரோட்டில் திரியும் அந்த பாவப்பட்ட நபருடன் ஒன்றிணைந்து வாழ்வது என்பது சகிப்புத்தன்மை கிடையாது, முட்டாள்தனம்.

இன்று சகிப்புத்தன்மை என்பது இந்த உதாரணத்தைப் போன்றுதான் நடந்து கொண்டிருக்கிறது. தேவையற்ற மசாலா விஷயங்களுக்கெல்லாம் சகிப்புத்தன்மை இல்லை என்று பொய்யுரை பரப்புகின்றனர்.

உதாரணத்திற்கு மாற்று மதத்தினர் பண்டிகைகளை போற்றிக் கொண்டாடும் நாம், நமது பண்டிகையின்போது செய்யப்படும் பலகாரவகைகளை எத்தனை மதத்தினர் ஏற்றுக்கொள்கின்றனர்.

வந்தாரை வாழ வைப்பதில் தவறில்லை, அவர்களின் வாழ்விற்காக நமது குடும்பத்தை இழப்பது முட்டாள்தனம். தற்போது இந்தியாவில் இந்துக்களிடம் இதுதான் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

மாற்று மதத்தினரை இகழ வேண்டாம், வெறுக்க வேண்டாம், நம் மதத்தின் கருத்துக்களையும் கொள்கைகளையும் மறக்காமல் உயிருக்கு ஈடாக மதித்தாலே போதும். அடுத்தவர் வீட்டு பிள்ளைகளை புகழ்ந்து அவர்களை அரவணைக்கும் நம் கைகள் ஏனோ நமது வீட்டு பிள்ளைகளை வெறுக்காமல் இருந்தால் போதும்.

– ச.நாகராஜன்,







# மின்னூல் வடிவத்தில்

## ஆன்மிகமலர் மெயில் புத்தகத்தின்

அனைத்து பிரதிகளையும் படித்து மகிழ...

ஆன்மிகமலர்
ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!! .காம்

www.aanmeegamalar.com

MAGZTER
DIGITAL MAGAZINE STORE
TAP · READ · ENJOY

இணையதளங்களை பார்க்கவும்...

aanmeegamalar.com
இணையதளத்தின் செய்திகளை

உலகின் அனைத்து
மொழிகளிலும்
செய்திகளைத் தரும்

dailyhunt

மொபைல் அப்பில் உடனுக்குடன்
தெரிந்து கொள்ளலாம்.